Computer Today ISSN 1391-6831 ஜனவரி 2005

# கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை



- ஜாவா ஸ்கிரிப்ட் ஜாலம்
- வாசகர் வட்டம்
- தொழில் வங்கி

லீனக்ஸ்



இணையத்தில் இறக்கியவை

புத்தம்புதிய சிறப்பம்சங்கள்






Spam தொல்லை ஒழிகிறது

7thTamil Internet Conference

அனைத்துலகத் தமிழ் இணைய மாநாடு


...ஒரு சிறப்பு பார்வை

விலை ரூபா 30

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 7th Tamil Internet Conference
## அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

ஒரு சிறப்புப் பார்வை

பக்கம் 22 – 34

## செய்திகள்.... தருவது மௌஸ் மணி



### ஐபிஎம்மின் டிஎல்பி ப்ரொஜெக்டர்!

ஐபிஎம் நிறுவனம், குறைந்த எடையில் சிறிய அளவில் எம்400 என்ற டிஎல்பி ப்ரொஜெக்டரை (M400 DLP Projector) அறிமுகம் செய்துள்ளது. 1.1 கிலோ எடையில் அமைக்கப்பட்டிருக்கும் இதன் படம் வெளியிடும் திறன் துல்லியமாக இருக்கும் இதனை இயக்க தனி ரிமோட் கன்ட்ரோலும், ஒலி வழங்க உள்ளிணைந்த ஸ்பீக்கரும் எம் 400 ப்ரொஜெக்டருடன் வருகிறது.

## இணையத்தில் இறக்கியவை

பக்கம் 20

## உங்களுக்காக ஒரு OPERATING SYSTEM நீங்களே உருவாக்குங்கள்.

பக்கம் 05

## இன்டர் வியூவுக்குத் தயாராக வேண்டுமா?

இதோ இருக்கிறது சொப்ட்வெயார்!

பக்கம் 08


## கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

அச்சிட்டு வெளியிடுபவர்கள் : நிலவு.com
4C6 1/1, பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு- 06.
தொலைபேசி : 0 112 362 112
e m@il : com2day@gmail.com

ஆசிரியர் : சி.அனுராஜ்
இணை ஆசிரியர் : எஸ்.பிரதீப்
ஆசிரியர் குழு : ப்ளஸ், ஜேனா, சரவணன், கார்த்தி, மாது, இணையன், சிலந்தி, மணி.


கம்ப்யூட்டர் ருடே யில் பிரசுரமாகும் ஆக்கங்களை ஆசிரியரின் அனுமதியின்றி பகுதியாகவோ முழுமையாகவோ மறுபிரசுரம் செய்ய இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டர் ருடே
ஜனவரி 2005

வாசகர்களுக்கு வணக்கம் !

## மௌனம்

மௌனமாக சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலிகள்.

அடுத்து,

புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்.

புதியதொரு ஆண்டில் முதலாவது இதழின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. கடந்த காலங்களில் எமக்கு தந்துவந்த அதே ஆதரவையும் பங்களிப்பையும் இந்த புதிய ஆண்டிலும் உங்களிடம் எதிர்பார்க்கிறோம்.

இந்த இதழானது 'தமிழ் இணைய மாநாடு 2004" ற்கான சிறப்புக் கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வந்துள்ளதால் வழமையாக இடம்பெறும் பல ஆக்கங்கள் இந்த இதழில் தொலைந்து போயிருக்கின்றன. அவற்றினை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பவர்கள் வரும் இதழ்களில் உங்கள் ஆசையைப் பூர்த்தி செய்யலாம்.

மேலும் இந்த ஆண்டானது **"கணினி விழிப்புணர்வு ஆண்டு"** என **கம்ப்யூட்டர் ருடே** குழுவினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. "உலக நாடுகள் அனைத்தும் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் வேகமாக முன்னேறிவிட நாம் அவற்றினை செய்திகளாகவும் அதிசயங்களாகவும் பார்த்துக் கொண்டிருந்தது போதும். இனிவரும் காலங்களில் நாமும் அவ்வாறு சாதனை படைப்போம்." என்ற கோஷத்துடன் பல்வேறு வேலைத்திட்டங்களை உள்ளடக்கி இந்த ஆண்டு முழுவதும் மக்களிடம் நேரடியாகச் செல்லவுள்ளனர் எமது ஆசிரியர் குழுவினர்.

இந்தச் செயற்திட்டத்திற்கு ஆர்வமுள்ள அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

மீண்டும் அடுத்த இதழில் இன்னும் பல சுவாரஸ்யங்களுடன்..........


அன்புடன்
ஆசிரியர்

# லேட்டஸ்ட்

## எம்.பி.3 கண்ணாடிகள்

எம்.பி.3 எனப்படும் இசை வடிவம் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம் கை அகல குருந்தட்டில் நூற்றுக்கணக்கான பாடல்கள் இசை மெட்டுக்களை பதிவு செய்யும் வசதி கொண்டது. எம்.பி.3 இத்தகைய எம்.பி.3 வந்த பிறகு ஓடியோ கசட்டுகள் மற்றும் டேப்ரெக்காடர்கள் காணாமல் போய் விட்டன. எம்.பி.3 குறுவட்டுக்களை இயக்க ஒரு 'பிளேயர்' தேவைப்படும். வோக்மேன் கருவிகளில் கூட எம்.பி.3 தகடுகளை பயன்படுத்தும் கண்டு பிடிப்புகள் கூட வந்து விட்டன.

இதில் நவீன தயாரிப்பு தான் எம்.பி.3 சன் கிளாஸ் (MP3 Sun Glass) அதாவது நாம் வெயில் காலத்தில் அணிந்து கொள்ளும் குளிர்



கண்ணாடியில் எம்.பி.3 பாடல்களை பதிவு செய்யும் கம்ப்யூட்டர் 'சிப்' (நினைவு பெட்டகம்), அதை இயக்குவதற்கான பேட்டரிகள், காதில் பொருத்திக் கொள்ளும் இயர்போன்கள் போன்றவை இருக்கும். இந்தக் கண்ணாடியில் உள்ள (கம்ப்யூட்டர்) நினைவுப் பெட்டகத்தில் இருந்து பிற கம்ப்யூட்டருடன் தொடர்பு கொள்ள இணைப்பு வசதியும் உண்டு.

அதாவது உங்கள் கம்ப்யூட்டரில் எம்.பி.3 பாடல்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தால் அதை வயர் இணைப்பு (U.S.B Jack) மூலம் எம்.பி.3 கண்ணாடியில் உள்ள நினைவுப் பெட்டகத்தில் பதிவு செய்யலாம். பின்னர் "பட்டனை" அழுத்தியதும் இயர்போன் வழியாக இசை அருவி பாயும்.

உடற்பயிற்சி செய்பவர்கள் விளையாட்டு வீரர்கள், மலை ஏறுபவர்கள், பைக் மற்றும் கார் பந்தய வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது குளிர் கண்ணாடிகள் அணிந்து கொள்வது வழக்கமாக உள்ளது. அவர்கள் இசை கேட்டபடி தங்கள் பணிகளைச் செய்ய இத்தகைய எம்.பி.3 கண்ணாடிகள் உதவுகின்றன.

குறிப்பாக பந்தயங்களில் கலந்து கொள்ளும் வீரர் - வீராங்கனைகளுக்கு இந்த எம்.பி.3 கண்ணாடி மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கூறுகின்றனர். பொதுவாக பந்தயங்களில் கலந்து கொள்பவர்கள் பதட்டமும் பரபரப்பும் நிறைந்து இருப்பார்கள் அவர்களைஅமைதிப்படுத்தி முழுத் திறமையை வெளிப்படுத்த இசை உதவுகிறது. எனவே எம்.பி.3 கண்ணாடி அணிந்து கொண்டு போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் அதிக அளவு திறமைகயை வெளிப்படுத்த முடிகிறது. என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

எம்.பி.3 கண்ணாடியில் சுமார் 6 மணி நேரம் இசை - பாடல்களை பதிவு

தொடர்ச்சி அடுத்த பக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் திறன் கொண்ட நினைவுப் பெட்டகங்கள் உள்ளன. 128 எம்.பி அல்லது 256 எம்.பி கொள்ளளவு கொண்ட 'சிப்'புகள் பொருத்தப்பட்ட கண்ணாடிகள் கிடைக்கின்றன. ஒக்லே நிறுவனத்தின் தயாரிப்பான இந்த கண்ணாடி ஒன்றின் விலை ரூ.35 ஆயிரத்தில் இருந்து ரூ.55 ஆயிரம் ஆகும். இந்த மாதம் முதல் இந்த எம்.பி.3 கண்ணாடிகள் விற்பனைக்கு வருகின்றன.


-கனா

## பாதி டிவி - பாதி கம்ப்யூட்டர்

மனிதம் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவையாக சில மனிதர்கள் இருப்பதுண்டு. படத்தில் நிங்கள் பார்க்கும் கம்ப்யூட்டரும் அப்படிப்பட்ட ரகம் தான். அதாவது கம்ப்யூட்டர் பாதி - டிவி பாதி Sony நிறுவனத்தின் தயாரிப்பான இந்த கம்ப்யூட்டரில் (இதன் பெயர் வயோ விஜிடெக்ஸ் எக்ஸ் 90 எம்.பி - Vaiovex-x90p என்பதாகும்.)


TV மற்றும் கேபிள் இணைப்பை ஏற்படுத்தி நிகழ்ச்சிகளை பார்க்கலாம். நாம் முன் கூட்டியே கட்டளையிட்டாள் நாம் விரும்பும் சேனல் நிகழ்ச்சிகளை இது பதிவு செய்து வைக்கும்.

உதாரணமாக அண்ணாமலை நேரத்தில், முக்கியமான வேலை இருந்தால் இந்த கம்ப்யூட்டரில் "ஹலோ கம்ப்யூட்டர் நமக்கு கொஞ்சம் முக்கியமான வேலை இருக்கு அதனால அண்ணாமலை புரோகிராமை பதிவு செஞ்சிடு அப்படின்னு உத்தரவு போட்டா போதும். கம்ப்யூட்டர் நீங்க சொன்னபடி சரியா அந்த நிகழ்ச்சியை பதிவு செய்து வைத்துவிடும். இது மாதிரி ஒரு புரோக்கிராம் மட்டுமல்ல ஒரே நேரத்தில் 7 சனல்களில் வர்ற நிகழ்ச்சியை பதிவு செய்யும். மேலும் 5 நாள் முழுவதும் ஒளிபரப்பாகும் மொத்த நிகழ்ச்சிகளை பதிவு செய்யும்




அளவுக்கு இதில் சக்தி வாய்ந்த ''மெமரி'' (பதிவு பெட்டகம்) இருக்கின்றது. ஜப்பான் நாட்டில் இந்த மாத இறுதியில் விற்பனைக்கு வர இருக்கும். இந்த பாதி கம்ப்யூட்டர் - பாதி TV யின் விலை. 8 லட்சத்து 50 ஆயிரம் ருபாய்.

## படம் பார்க்கலாம்




"போட்டோ புடிச்சா ஆயுள் குறைஞ்சு போயிடும்" என்று கிராமத்து மக்கள் அப்பாவியாய் சொல்வதை கேட்டிருக்கலாம். ஆனால் இன்று புகைப்படம் எடுப்பதும் வீடியோ படம் பிடிப்பதும் சகஜமாகி விட்டது.

மனம் விரும்பும் நிகழ்ச்சிகளை சந்தோஷம் தரும் தருணங்களை படம் பிடித்து வைத்துக் கொள்வதில் ஆர்வம் அதிகரித்து வருகிறது. 'பிலிம்' களை பயன்படுத்தி புகைப்படம் எடுப்பது "அதிக செலவு பிடிக்கும்" வகையில் இருந்தது. இப்போது "பிலிம்" களுக்கு பிரியாவிடை கொடுக்கப்பட்டு டிஜிட்டல் கேமிராக்கள் புயலாய் புகுந்து விட்டன.

கைக்கு அடக்கமான தோற்றம், நாம் எடுக்கும் படங்களை உடனுக்குடன் திரையில் சரி பார்த்துக் கொள்ளும் வசதி, நாம் எடுத்த படம் நன்றாக வரவில்லை என்றால் அதை அழித்து விட்டு வேறு படம் எடுக்கும் வசதியும் 'டிஜிட்டல்' கமராக்களில் இருக்கிறது. இந்த கமராக்களில் எடுக்கும் படங்களை கம்ப்யூட்டரில் சேமித்து வைக்க முடியும். சில நேரங்களில் சுற்றுலா செல்லும் போது கம்ப்யூட்டரை எடுத்துச் செல்ல முடியாது. அது போன்ற நேரத்தில் டிஜிட்டல் கமராக்களில் எடுக்கும் படங்களை சேமித்து வைக்க உதவும் கருவி தான் "போர்டபிள் போட்டோ வீயூவர்" (Portable Photo Viewer.)

ஜப்பான் நாட்டில்உள்ள சீகோ எப்சன் நிறுவனம் தயாரித்துள்ள இந்தக் கருவி கைக்கு அடக்கமானது. இதில் 40 ஜி.பி. கொள்ளளவு கொண்ட நினைவுப் பெட்டகம் உள்ளது. 3.8 அங்குலம் அகலம் கொண்ட திரையும் இதில் உண்டு.

டிஜிட்டல் கமராவில் எடுக்கப்படும் படங்களை வயர் இணைப்பு மூலம் 'போர்ட்டபிள் போட்டோ வியூவர்' கருவிக்கு மாற்றிக் கொள்ளலாம். இதில் ஒரே நேரத்தில் 10 ஆயிரம் படங்களை பதிவு செய்து வைக்க முடியும். இது தவிர இந்த கருவியில் 'வீடியோ' படங்களை திரையிட்டு பார்க்கலாம். 'ஆடியோ' (இசை) கேட்கலாம் மேலும் இந்த கருவியை டெலிவிஷன் மற்றும் கம்ப்யூட்டருடன் இணைக்க முடியும். இதில் பதிவு செய்துள்ள படங்களை 'பிரிண்ட்' எடுக்கவும் செய்யலாம். பல வசதிகளைக் கொண்ட இந்த கருவியின் விலை ரூ.45 அயிரம் முதல் ரூ 55 ஆயிரம் வரை விற்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மிக வேகமாக நடந்து வருகிறது. இதன் பயனான எமது பொழுது போக்கு அம்சமாக திரைப்படம் ஒரு முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

முன்னைய காலத்தில் திரையரங்குகளிற்கு சென்று திரைப்படங்களை பார்க்கக் கூடியதாக இருந்தது. பின்னர் VCR மூலம் பார்க்கக் கூடியதாக மாறியது. அடுத்த கட்டமாக கணினி VCR Player அறிமுகமான பின்னர், CD யில் திரைப்படங்களை பார்க்க வசதி வந்தது. அதையும் தாண்டி இப்போது DVD யின் பாவனை பரவலாகி வருகிறது.

DVD என்று சுருக்கமாக அழைக்கப்படும் Digital Versatile disk அல்லது Digital Video Disk ஆன இதன் மூலம் மிகவும் துல்லியமாக படங்கை நாம் பார்க்க முடியும். அது மட்டுமல்லாது மிகச் சிறந்த ஒலி அமைப்பையும் கூடிய கொள்ளளவையும் கொண்டதாகும்.

இருந்த போதிலும் இவ்வாறான DVD களை இயக்கும் போது சில சமயம் Illygal DVD Redion The Region of the authorised region of your DVD Player என்று சில பிழைச் செய்திகள் வரலாம். உங்களில் பலருக்கு இவ்வாறானதொரு அனுபவம் ஏற்பட்டிருக்கும். உடனே நாம் எமது DVD Drive தான் ஏதோ பிழையானது என்று நினைத்து விடுவோம். ஆனால் உண்மை அதுவல்ல.


திரைப்பட DVD களில் அது எந்த நாட்டில், அல்லது எந்தப் பகுதியல் அதாவது Region இல் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான குறியீடும் சேர்ந்தே பதியப்பட்டு வரும், இத்னை Region Code என்று சொல்வார்கள்.

ஏனெனில் திரைப்பட தயாரிப்பாளர்கள் குறிப்பிட்ட நாட்டிற்கு, அல்லது பகுதிக்கு மட்டும் என்று திரைப்படங்களை தனித்தனியாக ஒவ்வொரு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வார்கள். இவர்கள் இந்த திரைப்படங்களை அனுமதியின்றி தாங்கள் பெற்றக் கொண்ட உரிமைப் பிரதேசத்தை மீறி இந்த DVD களை விற்பனை செய்வதற்கோ, அல்லது அங்கு கொண்டு சென்று பாவிப்பதையோ தடுக்கும் முகமாகவே இவ்வாறு செய்யப்படுகிறது. எனவே பயனாளர்கள் கொள்வனது செய்ய நாட்டில் அல்லது பகுதியல் உருவாக்கப்பட்ட DVD களை அங்கே மட்டுமே அவர்களால் இயக்கிப் பார்க்க முடியும்.

அவ்வாறில்லாமல் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வார்களானால் Region Code பிரச்சினை வரும். இப்படியான சிக்கல்கள் வரும் போது நீங்கள் DVD Region இனை (Counter oad) மாற்றிக் கொள்வதற்கும் வசதி வாய்ப்புகள் உள்ளன. இருந்த போதிலும் Region Code இனை எத்தனை முறை இப்படி மாற்றலாம் என்பதற்கான உச்ச வரம்பு ஒன்றும் உள்ளது.

இந்த எண்ணிக்கையை மீறும் போது Out of Region என்ற இன்னுமொரு பிழைச் செய்தி தோன்றும். ஆனாலும் அதற்கு மேலும் உங்கள் DVD Drive இன் Region இனை மாற்றுவதற்கு வழி இல்லாமல் இல்லை. இணையத் தளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்தக் கூடிய பல மென்பொருட்களின் உதவியால் நீங்கள் தொடர்ந்து இந்த DDVD Region இனை மாற்றி பாவிக்க முடியும்.

மேலும் நீங்கள் DVD Drive இனை கணினியில் நிறுவும் போது அது சரியாக Configer செய்யப்படாமல் இருந்தாலும் DVD Region பிழைச்செய்தி தோன்ற வாய்ப்பு உள்ளது. அவ்வாறு DVD Drive ஆனது சரியாக Configer செய்யப்படாமல் இருந்தாலும், நீங்கள் முதலில் பாவிக்கத் தொடங்கும் பொழுது கணினி DVD Region இனை சரியாக Configer செய்ய முயற்சி செய்யும் எனவே நிங்கள் DVD Region Code அட்டவணையை பயன்படுத்தி சரியான Region ற்கு மாற்ற வேண்டும் இதற்கான அட்டவணையை நீங்கள் கொள்வனவு செய்த DVD Drive தயாரிப்பாளர்களின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.




ஆக மொத்தத்தில் திருட்டு DVD களை கூட நிங்கள் பாவித்து பயன்பெறலாம் நிரைப்பட தயாரிப்பாளர்களின் வயிற்றில் மண் அள்ளிப் போடலாம்.

-சிலந்தி.-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்காக ஒரு OPERATING SYSTEM நீங்களே உருவாக்குங்கள்.

சாதிக்க துடிப்பவர்களே நீங்களும் உங்களுக்காக (Operating System - ஐ) இயங்குதளத்தை உருவாக்கலாம்.

ஆர்வமும். அறிவும் நிறைந்த சாதிக்க துடிக்கும் எமது "கம்ப்யூட்டர் ருடே" வாசகர்களே உங்களுக்காக இந்த தொடரை எமது தாய்மொழியில் எழுதுவதன் மூலம் எமது தாய்மொழியிலும் ஒரு சில இயங்குதளங்களை உருவாக்கக் கூடியவர்களுக்கு வழிகாட்டுவதால் எமது நிறுவனமும் பெருமையடைகிறது. உலகில் பிறக்கக் கூடிய மனிதர்கள் எல்லோரும் சாதித்து விடுவதில்லை.

ஆம்! அன்றைய திருவள்ளுவர் முதல் இன்றைய கண்ணதாசன் வரை தங்களுடைய வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று நினைத்ததால் தங்களுடைய துறையில் இனி எக்காலத்திலும் அவர்களின் பெயர் மங்காமல் நிலைக்கக் கூடிய வகையில் சாதனைகள் செய்தார்கள்.

இவர்கள் மட்டுமா? தோமஸ் அல்வா எடிசன், அறிஞர் மெண்டல், நியூட்டன் ஏன் கம்ப்யூட்டருக்கு கரு கொடுத்த சார்லஸ் பாபேஜ் போன்றவர்களும் சாதித்தவர்கள் தான்.

அதே போல் இன்றைய உலக மக்கள் அனைவரும் பயன்படுத்தக் கூடிய வகையில் கணினிகளுக்கான இயங்கதளம் Office package, Game முதல் சிறிய மென்பொருள்கள் வரை வழங்கிக் கொண்டிருக்கும் மைக்ரோ சொப்ட் பில்கேட்ஸ் என்பவரும் சாதனையாளர் தான் ஏனென்றால் இனிவரும் உலகத்தில் முக்கால் பங்கு வின்டோஸ் என்ற இயங்குதளம் இல்லாமல் தன்னுடைய செயல்பாடுகள் அனைத்தும் நிறைவேற்ற முடியாத அளவிற்கு கொண்டுவந்துள்ளார்.


வருங்கால சாதனையாளர்களே! இப்போது மேலே கூறப்பட்ட சாதித்தவர்களின் பின்னனியைப் பற்றி சற்று சிந்திப்போம்.

அவற்றில் முதல் வகை அவர்களுடைய காலத்தில் முதன்மையாக இருந்த துறையில் சாதித்துள்ளார்கள். ஆனால் இன்றைக்கு முதன்மையான துறை மாறினாலும் இன்றைய உலக மக்களுக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருக்கிறது.

இரண்டாவது வகையினரைப் பார்த்தீர்களானால் அவர்கள் ஓர் புதிய துறையையே உருவாக்கியவர்கள். இவர்களின் இந்த சாதனைக்கு காரணம் அவர்களின் பல கஷ்டங்களுக்கு இடையே அவர்களின் விடா முயற்சி ஆகும்.

மூன்றாவது வகையினரைப் பார்த்தீர்களானால் தனியொருவரின் தொடர்ந்த முயற்சியினால் எதிர்கால உலகத்தையே தனது கைக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். இவர் தனியாளாக யோசித்திருந்தால் இதனை ஒரு அடி கூட உயர்த்தியிருக்க முடியும்.

இன்றும் அவருக்குப் பின்னால் இருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான சாதிக்கத் துடிக்கும் ஆர்வம் உள்ள ஓர் சமுதாயம் தான் இந்த அளவிற்கு சாதனையாளராக உருவாக்கியுள்ளது.



என்னடா இவன் OS எழுதப்போவதாக சொல்லி சரித்திரம் எழுதுகிறான் என்று நினைக்கிறீர்களா? இல்லை, இல்லை. ஏன் இவற்றை இங்கே கொடுத்தேன் என்றால் தற்போதைய தகவல் தொழில்நுட்ப உலகில் முன்னணியில் நிற்கக் கூடிய துறை எதுவென்றால் Computer என்ற Hero தான்.

ஆம் அந்த Hero செயல்பட ஏதாவது ஒருவகை இயற்குதளம் தேவை. பெரும்பாலும் இப்போது பாவனையில் உள்ள இயங்கு தளங்கள் அனைத்தும் ஆங்கிலத்தை அடிப்படையாகக் கொண்டது. எமது தாய் மொழியில் எப்போது அந்த Hero வை நடிக்க வைக்கப் போகிறோம். ஆம் இடையே உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன் இந்தியாவில் எழுத்தாளர் சுஜாதா அவர்களின் தலைமையில் எமது தாய்மொழியில் 'ழ கணினி' எனப் பெயரிடப்பட்ட இயங்குதளம் நிறைவடையும் நிலையில் உள்ளது. அதே போல் நீங்களும் உங்களுடைய இயற்குதளத்தை வருங்கால உலகிற்காக உருவாக்க வேண்டும் என்பது தான் எமது அவா.

அந்த OS எழுதுவது ஒரு சிறிய வேலையா? தனியாள் வேலையா? உடனே எழுதிவிட முடியுமா? என்று யோசித்தால் இல்லை, சற்று கடினம் என்று தான் தோன்றும். ஆனால் சாதிக்க நினைப்பவர்கள் எதையும் கடினம் என்று

**OS எழுதுவது ஒரு சிறிய வேலையா? தனியாள் வேலையா? உடனே எழுதிவிட முடியுமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் தான் இந்த தொடரிலே உங்களையும் வருங்கால சாதனையாளர்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறேன்.


அதற்காக முதலிலேயே சோர்ந்து விடாதீர்கள். OS எழுதுவது எவ்வளவு கடினம் என்று கூறவில்லை. அது எவ்வளவு ஆழம் என்பதை கூறியுள்ளேன். "ஆழம் அறிந்து காலை விடு" என்ற பழமொழிக் கேற்ப அதனுடைய ஆழத்தைத் தான் கூறியுள்ளேன். இனி நீங்கள் தைரியமாக இறங்கலாம். எப்போதும் இந்த "கம்ப்யூட்டர் ருடே" இதழும், எமது குழாமும் உங்களுக்காக உதவிக்காக கரையில் கட்டப்பட்ட கயிறு போன்று காத்துக் கொண்டிருப்போம்.

இப்போது, இயங்கு தளம் என்றால் என்ன என்று படித்தவர்கள் அறிந்திருப்பீர்கள். என்றாலும் புதியவர்களுக்காக சொல்கிறேன். ஒரு கணினி என்பதை வெறும் Machine மட்டும் தான். அந்த machine யை இலகுவாக பயன்படுத்த எத்தனையோ துறைகளில் எவ்வளவோ மென்பொருட்கள் உள்ளன. அந்த மென்பொருள்கள் எல்லாம். machine ல் செயல்பட எமக்கு தேவைப்படும் ஓர் இடைமுகம் தான் இயங்குதளம்.

இதற்கு சிறிய எடுத்துக்காட்டு, ஓர் கடலின் நடுவில் புதியதாய் உருவாக்கப்படும் நகரம் ஒன்றை கற்பனை செய்து பாருங்கள். அந்த நகரில் உள்ள ஒவ்வொரு கட்டடங்களும் ஒவ்வொரு மென் பொருள்களுக்கு சமம் ஆகும். அங்கே உள்ள அரசா ங்கம். ஓர் Kernel போன்றதாகும். அங்கே உள்ள பிரதேச செயலகம் Registry போன்றதாகும். அங்கே உள்ள மக்கள் பேசக் கூடிய மொழிதான் இயங்குதளத்தின் அடிப்படை மொழி. அங்கே இயங்குதளம் என்பது கடலின் நடுவே அவர்களைத் தாங்கி நிற்கும் நிலம் தான்.

இனி தலைப்புக்கு வருகிறேன்.........
இப்போது நிங்களும் OS எழுத வேண்டும் என்று புறப்பட்டு விட்டீர்களாதலால், நீங்கள் Language ம், C language ம் கற்றிருக்க வேண்டும். முதலில் OS எவ்வாறு ஓர் கணினியில் செயல்படுகிறது என்று பார்ப்போம்.

OS என்பது பல சிறிய Program கள் எல்லாம் சேர்ந்து செயல்படும் ஒரு கட்டமைப்பு தான். இது ஒரு பக்கம் Hardware ஐயும் மற்றொரு பக்கம் Memory யையும், இன்னொரு பக்கம் Currently running program களையும், அடுத்த பக்கம் Software களையும் கட்டுப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.




எனவே, எமது OS க்கும் நாம் Hardware, Memory, Running Program, Software போன்றவற்றை Control செய்ய Program கள் எழுத வேண்டும். எல்லாவற்றிற்கும் முதல் நாம் இந் பகுதியல் ஓர் சிறிய program ஐ OS ஆக கருதுவோம். அந்த OS உங்களுடைய கணினியில் இயங்க முதலில் Boot Sector ஐ மட்டுமே Loard எழுத வேண்டும்.

ஒரு Boot Loader ஆல் ஒரு OS ஐயே Load செய்ய இயலாது. இது Boot sector ஐ மட்டுமே Load செய்கிறது. Boot sector என்பது ஒரு Harddisk இல் அல்லது Floppy disk இல் முதன் முதலாக உள்ள sector ஆகும். இந்த boot sector இல் Os ஐ Load செய்வதற்கான program இருக்கும்.

இந்த boot sector ஆல் Os ஐ Load செய்வதும் Hardware மற்றும் CPU போன்றவற்றை தொடக்கிவைப்பதும் ஒரே நேரத்தில் செய்ய இயலாது. இது 512 bytes ஐ நினைவகம் மட்டுமே கொண்டுள்ளது.

இதனால் இந் Boot sector ஆனது OS இன் ஒரு பகுதியை (அதாவது Kernal இன் ஒரு பகுதியை) ஒவ்வொரு Sector ஆக Load செய்கிறது. இதன் அடிப்படையில் எமக்கு Boot sector ஆனது ஓர் குறிப்பிட்ட ஆரம்பம் மற்றும் இறுதி Address களுக்கு இடையே ஒவ்வொரு Sector ஆக Load செய்ய வேண்டிய Program ஆகும். இதில் முதலாவது பகுதியாக OS Loader காணப்படும். இந்த OS Loader ஆனது Protect Moad இல் உள்ள control I os - kernel க்கு மாற்றுகிறது.

ஒரு os ஐ Boot செய்ய தேவையான படி

1. Stage 1 - Boot sector - அளவு 512bytes, உம் disk இல் முதலாவது sector.

2. Stage 2 - OS Loader - சாதாரண Executable (EXX,Com, CoFF) fikle களில் இருக்கும் kernal ஐ Load செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது OS Loader முறையாக என்ன செய்கிறது?

1. கணினியில் இருக்கக் கூடிய CPU, RAM, Insttaled Disk drive போன்றவற்றை சோதனை செய்து எல்லாம் சரியாக இருக்கிறதா என பார்க்கும். பிழையாக இருக்கும் பட்சத்தில் Error message ஐ கொடுக்கும்.


2. அடுத்து கணினியில் பொருத்தப்பட்டிருக்கும் disk drive களைப் பற்றிய தகவலை சேகரித்து எந்த Disk drive ஐ Load செய்யலாம் என ஆராய்ந்து அதனை Load செய்யும்.

3. அந்த பகுதியல் executable file format இல் இருக்கக் கூடிய OS Kernal Load செய்கிறது.

4. அடுத்ததாக OS க்கு தேவையான setup கள் அனைத்தையும் முடிக்கிறது.

5. இறுதியாக Load செய்யப்பட்ட OS பகுதிக்கு Control ஐ கொடுத்து விட்டு முடிந்து விடும்.

சரி அடுத்த இதழில் ஒரு Boot Loader ஐ எவ்வாறு உருவாக்குவது என்று Source Coding உடன் எதிர் பாருங்கள்.




Engg.S.T.Saravannabhiva BE(cse)
Stsbhava@yarlonline.com

# ஜூனியர் கம்ப்யூட்டர் ருடே

சிறார்களே!

தமிழ் இணைய மாநாடு 2004 காரணமாக இந்தமாதம் உங்களது பகுதியிலும் கைவைக்க வேண்டியதாகி விட்டது. அடுத்த இதழில் மீண்டும் முழுமையான 'ஜூனியர் கம்ப்யூட்டர் ருடே'.

## அன்பார்ந்த ஜூனியர்களே! உங்களுக்கு ஓர் சவால்



இன்றைய உலகமானது தகவல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சிகண்ட நிலையில், நாளுக்குநாள் இணையத்தை பயன்படுத்துபவர்கள் அதிகமாகிக் கொண்டே போகிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய தகவலை மற்றவர்களுக்கு பரிமாறுவதாக உள்ளது. அதிலும் ஒரு சிலருக்கு அடுத்தவரின் விஷயம் என்றால் இன்னும் கவனமாக மூக்கை நுழைப்பார்கள். அவர்கள் இவ்வாறு வரக்கூடிய மிக முக்கிய இரகசிய செய்திகளை எடுத்து அதனை தவறாக பயன்படுத்துவதற்கு முயலுகிறார்கள். இதனால் அப்படிப்பட்ட செய்திகளை இனையத்தில் அனுப்பும் போது அதனை உருமாற்றி அனுப்புகிறார்கள். இவ்வாறு உருமாற்றப்பட்ட தகவல்களை **Cypher Text** என்றும். உருமாற்றுவதற்கு **Encryption** என்றும் பெயர்.

இங்கே உள்ள வரிகயைக் கவனியுங்கள்.

**fk;g;A+l;lh; UNI- ,yq;ifapd; Kjy; fzpdpr; rQ;rpif.**

இந்த வரியானது பொருள் உள்ள ஒரு வரி. ஆனால், உருமாற்றப்பட்டுள்ளது. இதற்கான சரியான பொருளை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். கண்டுபிடித்தவர்கள் உங்களது விடையை '**ஜூனியர் கம்ப்யூட்டர் ருடே, 4C6 1/1 Fussels Lane, colombo-06.**' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சிறார்களே!

உங்களது ஆக்கங்கள், ஓவியங்கள் என்பன இப்பகுதியில் பிரசுரமாகவேண்டும் என்று விரும்பினால் எழுதி அனுப்பலாம்.
கணினித்துறைசார்ந்தவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஜூனியர் கம்ப்யூட்டர் ருடே

தொடர்புகளுக்கு:
**ஜூனியர் கம்ப்யூட்டர் ருடே,**
**4C6 1/1 Fussels Lane,**
**Colombo-06,**
**Sri Lanka.**
**com2day@gmail.com**
**Phone: 0 112 362 112**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர் வியூவுக்குத் தயாராக வேண்டுமா?

## இதோ இருக்கிறது சொப்ட்வெயார்!





அனைத்து சர்வதேச நிறுவனங்களும் தங்களுக்கு நல்ல பணியாட்கள் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஒரு நல்ல அதிகாரி ஒரு நிறுவனத்தையே தலைகீழாக லாபகரமான நிறுவனமாக மாற்ற முடியும்.

இருபது ஆண்டுகளுக்கு முன் பத்து வேலைவாய்ப்பு விண்ணப்பத்தை ஒரு நிறுவனம் பெற்றால் அனைவருக்கும் வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது. இன்று ஒரு நிறுவனம் ஆயிரம் பயோடேட்டாவை வைத்துக் கொண்டு ஒரு நபரை மட்டும் தேர்ந்தெடுக்கும் நிலை கூட பல இடங்களில் உள்ளது. அந்த அளவுக்குப் படித்தவர்கள் அதிக அளவில் உள்ளனர். அதிக எண்ணிக்கையில் இருந்தாலும். திறமையானவர்களுக்கே மதிப்பு உள்ளது.

ஒரு நிறுவனத்தின் பணியிடத்தில் பதவிக்கான சரியான நபரை தேர்ந்தெடுப்பதற்காக Drake P3 என்ற மென்பொருள் வெளியிடப்பட்டு உலக அளவில் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த மென்பொருள் மூலமாக லட்சக்கணக்கில் பயோடேட்டாவை பெற்று அதில் பத்து பதினைந்து பேரைச் சுலபமாகத் தேர்ந்தெடுக்கிறது.

ஒரு நபரின் பயோடேட்டா அனுபவம் மற்றும் சிறப்பாற்றல் இவற்றக்கு அப்பாற்பட்டு நூறு கேள்விகள் கேட்கப்படுகின்றன. இக்கேள்விகள் நிறுனத்தின் பதவிக்கு ஏற்ப் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பதவிக்கான கேள்விகளும் அலுவலக பொறுப்பக்கு ஏற்றபடி மாறுபடுகிறது. இந்த நிறுவனத்தின் அனைத்துக் .கேள்விகளும் உலக அளவில் புகழ் பெற்ற மேலாண்மை மற்றும் மனோ தத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி முடிவுகளின் படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் தவிர தனிநபரும் இந்த மென் பொருள் மூலமாக தங்களைச் சோதனையிடலாம். இன்டர்வியூவிற்குத் தயாராகும் ஒவ்வொருவரும் இந்த மென்பொருள் மூலமாக நிறுவனப் பணிக்கு ஏற்றபடி நாம் தயார்க உள்ளோமா என்று நம்மைச் சோதனையிட்டுக் கொள்ளலாம்.

ஹாங்காங் நாட்டை தலைமையிடமாகக் கொண்ட ஜாப்ஸ்டிபி நெட்வொர்க் என்ற நிறுவனம் இந்த சிடியைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

தனிநபரின் சிறப்பாற்றலை சோதனையிடும் இந்த மென்பொருள் இது வரை 40 ஆயிரம் பிரதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. IBM, HSBC வங்கி போன்ற பெரிய நிறுவனங்கள் இந்த மென்பொருள் மூலமாகவே பணியாட்களை தேர்வு செய்கின்றனர்.

இதுகுறித்த கூடுதல் விவரங்கள் அறிய www.jobsdb.com என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.

IBM








**JobsDB.com**
*Interactive Recruitment Network*

**நீங்களும் எழுதலாம்!**

கம்ப்யூட்டர் டுடே சஞ்சிகையில் உங்கள் படைப்புக்களும் இடம்பெற எழுதி அனுப்புங்கள் எமது முகவரிக்கு. தரமானவைக்கு நிச்சயம் இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் வசம் யார்........?



“கீச்சு மாச்சு தம்பளம்
கியாமயா தம்பளம்”
“நுள்ளுப்பிறாண்டி
கிள்ளுப் பிறாண்டி”
தெரியாது எமக்கு.....!
தெரிந்ததே
Chatting உம் Software உம் தான்
அறிந்ததோ
internet உம் E-mail உம் தான்
கிட்டிப் புள்ளும் கிளித்தட்டும்
விளையாடாத மழலை நாம்....
Car race இலும் Gun fight இலும்
மெய் மறப்போம்....

பெற்றவர் மடியிருந்து
நாம்
பெற்றவை சொல்லித் தரும்
நவீனகால
சுவாமிநாதர்கள் நாங்கள்...!
ஆனால்
காலைக் கதிரவனும்
மாலைக் கருக்கலும்
எமக்கு
Flash இல் தான் தெரியும்...........!
பச்சைவயலும்
பஞ்சவர்ணக்கிளியும்
ஒளிசிந்தும் நிலவும்
அலைதள்ளும் கடலும்
Graphic இல் தான் புரியும்.......!


மைதானமெமக்கு
Monitor இல் தான்
அரவணைப்பு எப்போதும்
Key Board இல் தான்
உரையாடல் என்றும்
உறவாடல் நிதமும்
mouse ஓடு.........!

பக்கத்து வீட்டு பாமாவை
பார்க்கத் தடை
கீழ் வீட்டு கீர்த்தியோடு
பேசத் தடை
அடுத்த தெரு அனுவோடு
ஆட்டம் போடத் தடை
பின் வீட்டு பிருந்தாவோடு
விளையாடத் தடை
ஆனாலும்
உலகெங்கும் நமக்கு
ஊடுப்பட்ட நண்பர்கள்
சுற்றிப் பார்த்த நம்பெற்றோர்
கொஞ்சம் நமை
உற்றுப் பார்த்தார்களா..........?
கூடிக் குறும்பு செய்யும் பெருமையடக்க
தேடித் தேர்ந்து
ஒப்புவித்தார் எம் பெற்றோர்
ஒய்யார கணினி வசம்............
எம் வசமானது கணினி
சந்தோசமானது மனது
ஆனால்
இன்று...
யார் வசம் யார்.........?
சிந்திக்கும் தெளிவின்றி நாம்.....!!

ஜெ.சஜீபன்
தரம் - 11 யாழ் இந்துக் கல்லூரி

## டிஜிட்டல் கவிதை -05 இற்கான படம்.

இது உங்கள் கவிதை வரிகளுக்கான பக்கம். கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள படத்தைப் பார்க்கையில் உங்கள் உணர்வுகள் சொல்லும் சேதியை வரி வடிவங்களாக்கி, எங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரிகள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்து இருக்கவேண்டியது மிக மிக அவசியம். கணினிப் பயன்பாட்டினால் மனங்கள் மரத்துப்போகின்றன என்றொரு கருத்து ஆய்வாளர்களிடையே உண்டு. இங்கு பிரசுரமாகும் வரிகள் மரத்துப் போன இதயங்களைக் கொஞ்சம் இளகச் செய்யட்டுமே!




அனுப்பவேண்டிய முகவரி:
டிஜிட்டல் கவிதை -05,
*Computer Today,*
*4C6 1/1 Fussels Lane*
*Colombo-06.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Visual Basic 6.0

க.மதுகாவலன்
புத்தளம்.

தொடர் 03 இல் நாம் **Visual Basic** இல் ஒரு **Programme** ஐ எவ்வாறு உருவாக்குவது எனப் பார்த்தோம். இனி நாம் **ToolBox** இலுள்ள ஒவ்வொரு **Control** ஐயும் பற்றி விரிவாக ஆராய்வோம்.

## TextBox Control

Text Box Control ஆனது தரவுகளையும் (Data) பெறுமானங்களையும் (Values) உள்ளீடு செய்வதற்குப் (Input) பயன்படுகின்றது. TextBox இல் உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளை Run Time இன் போது மாற்ற முடியும்.

## TextBox Properties

### 1. Name :-

Name Property ஆனது TextBox இன் Name ஐ மாற்றி அமைக்கப் பயன்படுகின்றது. Name Property என்பது Visual Basic இல் பயன்படுத்தப்படும் அனைத்து Control களுக்கும் முக்கியமான Property ஆகும். ஏனெனில் இந்த Name Property ஐயே Coding இல் நாம் பயன்படுத்துகின்றோம்.

### 2. Text :-

Text Property என்பது TextBox Control இல் முக்கிய Property ஆகும். இந்த Text Property இல் நீங்கள் Type செய்யும் தரவுகளே TextBox இல் வெளிக்காட்டப்படும் (Display).

### 3. MaxLength :-

இப் Property மூலம் TextBox இல் Type செய்யக்கூடிய ஆகக் கூடிய எழுத்துக்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கலாம்.

### 4. Multiline :-

இந்த Property இன் பெறுமானத்தை True என மாற்றுவதன் மூலம் TextBox இல் பல வரிகளில் Type செய்யக்கூடியதாக இருக்கும்.

### 5. Locked :-

இந்த Property இன் பெறுமானத்தை True என மாற்றுவதன் மூலம் TextBox இல் உள்ள எழுத்தில் திருத்தம் செய்ய முடியாதவாறு மாற்றலாம். ஆனால் TextBox இல் உள்ள எழுத்தை Copy செய்யலாம்.

### 6. Enabled :-

இந்த Property இன் பெறுமானத்தை True என மாற்றுவதன் மூலம் User ஐ TextBox இனுள் Click செய்ய முடியாதவாறு மாற்றலாம்.

## TextBox Events

Visual Basic இல் Events என்பது முக்கிய விடயமாகும். அதாவது Event என்பது ஒரு Control இன் மீது நாங்கள் செய்கின்ற வேலையாகும் [உ+ம் :- Click( ) Event, KeyPress( ) Event, Change( ) Event]. Visual Basic ஆனது ஒரு Event Driven Programming Language என அழைக்கப்படும். ஏனெனில் இங்கு நாம் ஒரு Control இன் மீது மேற்கொள்ளும் ஒவ்வொரு வேலைக்கேற்றாற் போல் (Control இன் ஒவ்வொரு Event க்கு ஏற்றாற் போல்) Programme இயங்கும் விதமாகவே Coding எழுதுவோம்.

உதாரணமாக நாம் தொடர் 03 இல் பார்த்த Programme இல் ஒவ்வொரு Command Button ஐயும் Click செய்யும் போது ( Click( ) Event ) ஒரு குறிப்பிட்ட வேலை நடைபெறுவது போலவே Programme ஐ எழுதியிருந்தோம்.

Event களானது Control க்கு Control வித்தியாசப்படலாம். அதாவது பல Control கள் ஒரே விதமான Event களைக் கொண்டிருக்கலாம் அல்லது வெவ்வேறு விதமான Event களைக் கொண்டிருக்கலாம்.

TextBox க்குரிய முக்கிய Event, **Change( )** Event ஆகும். அதாவது Programme ஐ இயக்குபவர், Textbox இன் மீது Type செய்யும் போதோ அல்லது TextBox இலுள்ள எழுத்தை திருத்தம் செய்யும் போதோ ஒரு வேலை நிகழ வேண்டுமெனின் Textbox இன் Change( ) Event க்கே Coding எழுதப்பட வேண்டும்.

## Label Control

Label Control ஆனது Form இன் மீது எழுத்துக்களைத் தோன்றச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. Label Control ஆனது TextBox ஐ ஒத்தது. எனினும் Label Control இல் உள்ள எழுத்துக்களில் Run Time இன் போது மாற்றங்களைச் செய்ய முடியாது. Label Control ஆனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு Control ஐ அடையாளப்படுத்துவதற்காகவே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

## Label Properties

**1. Name :-**

Label Control இன் Name ஐ மாற்றியமைக்கப் பயன்படுகின்றது.

**2. Caption :-**

Label Control இன் மீது தோன்றும் எழுத்தை நிர்ணயிப்பதற்கு இப் Property பயன்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு Label Control இன் Caption Property மூலம், அக் Control அடையாளப்படுத்தும் Control இன் பயன்பாட்டை விளங்கிக்கொள்ளலாம்.

**3. Autosize & Wordwrap :-**

இவ்விரு Property களில் ஏதாவது ஒரு Property இன் பெறுமானத்தை True என மாற்றுவதன் மூலம் Caption Property இல் நீங்கள் Type செய்யும் எழுத்தின் அளவுக்கேற்ப Label Control இன் நீளத்தையும் தானாகவே மாற்றலாம்.

**4. Border Style :-**

இப் Property இல் இரண்டு பெறுமானங்கள் உண்டு. அவையாவன :-

0 – None

1 – Fixed Single

Default ஆக இப் Property இன் பெறுமானம் 0 – None எனக் காணப்படும். இதை 1 – Fixed Single என மாற்றுவதன் மூலம் Label Control இன் தோற்றத்தை TextBox Control ஐப் போல் மாற்றலாம். எனினும் TextBox ஐப் போல் இங்கு Run Time இன் போது Label Control இலுள்ள எழுத்தில் மாற்றம் செய்ய முடியாது.

## Command Button Control

பொதுவாக கூடுதலான Visual Basic Programme களில் பயன்படுத்தப்படுவது Command Button Control ஆகும். ஏனெனில் Command Button Control க்கே பொதுவாக Coding எழுதப்படுகின்றது.

## Command Button Properties

**1. Name :-**

Command Button Control இன் Name ஐ மாற்றியமைக்கப் பயன்படுகின்றது.

**2. Caption :-**

Command Button இன் மீது தோன்றும் எழுத்தை நிர்ணயிப்பதற்கு இப் Property பயன்படுத்தப்படுகின்றது. Caption இல் உள்ள ஓர் எழுத்தின் முன்னால் "&" அடையாளத்தை இடுவதன் மூலம் Run Time இன் போது Button ஐ Click செய்யாமல் Key Board இன் Alt Key யுடன் அக்குறிப்பிட்ட எழுத்தை அழுத்துவதன் மூலம் அந்த Button க்குரிய வேலையைச் செய்யலாம்.

(உ+ம்) :- **Caption : E&xit**




**3. Default :-**

இப் Property இன் பெறுமானத்தை True என மாற்றுவதன் மூலம் Button ஐ Click செய்யாமல் Enter Key ஐ அழுத்துவதன் மூலம் அந்த Button க்குரிய வேலையைச் செய்யலாம். ஒரு Form இல் உள்ள Command Button களில் ஒரு குறிப்பிட்ட Button க்கு மட்டுமே Default Property ஐ True என மாற்ற முடியும்.

**4. Cancel :-**

பொதுவாக ஒரு Form ஐ Close செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் Exit அல்லது Close போன்ற ஒரு Button இன் Cancel Property ஐ True என மாற்றுவதன் மூலம் அக்குறிப்பிட்ட Button ஐ Click செய்யாமல் Key Board இன் Esc Key ஐ அழுத்துவதன் மூலம் Form I Close செய்ய முடியும்.

**5. Style :-**

Command Button இன் Backcolor Property இல் மாற்றம் செய்ய வேண்டுமெனின் ( Command Button இன் Background Color ஐ மாற்றவேண்டுமெனின் ) அல்லது Background ஆக ஒரு Picture ஐப் போடவேண்டுமெனின் Style Property ஐ 1 - Graphical என மாற்ற வேண்டும்.

**6. Enabled :-**

Enabled Property ஐ False என மாற்றுவதன் மூலம் Command Button ஐ Click செய்ய முடியாமல் மாற்றலாம். அதாவது Run Time இன் போது Form இல் Command Button தோன்றினாலும் அதனை Click செய்யமுடியாது.

**7. Visible :-**

இப் Property ஐ False என மாற்றுவதன் மூலம் Run Time இன் போது Form இல் Command Button ஐ தோன்றவிடாமல் செய்யலாம்.


*அடுத்த இதழில் தொடரும்....*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஸ்கிறிப்ட் ஆனது உங்களது இணையத்தளத்தில் பனி பெய்வது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்.

# ஜாவா ஸ்கிரிப்ட் ஜாலம்!




```
<SCRIPT LANGUAGE="JavaScript">
<!-- Original:  Matthew Musgrove ( muskrat@lvnworth.com) -->
<!-- Web Site:  http://free.prohosting.com/~musgrove -->

<!-- This script and many more are available free online at -->
<!-- The JavaScript Source!! http://javascript.internet.com -->

<!-- Begin
var no = 50;
var speed = 1;
var ns4up = (document.layers) ? 1 : 0;
var ie4up = (document.all) ? 1 : 0;
var s, x, y, sn, cs;
var a, r, cx, cy;
var i, doc_width = 800, doc_height = 600;
if (ns4up) {
doc_width = self.innerWidth;
doc_height = self.innerHeight;
}
else
if (ie4up) {
doc_width = document.body.clientWidth;
doc_height = document.body.clientHeight;
}
x = new Array();
y = new Array();
r = new Array();
cx = new Array();
cy = new Array();
s = 8;
for (i = 0; i < no; ++ i) {
initRain();
if (ns4up) {
if (i == 0) {
document.write("<layer name=\"dot"+ i +"\" left=\"1\" ");
document.write("top=\"1\" visibility=\"show\"><font color=\"blue\">");
document.write(",</font></layer>");
}
else {
document.write("<layer name=\"dot"+ i +"\" left=\"1\" ");
document.write("top=\"1\" visibility=\"show\"><font color=\"blue\">");
document.write(",</font></layer>");
   }
}
else
if (ie4up) {
if (i == 0) {
document.write("<div id=\"dot"+ i +"\" style=\"POSITION: ");
document.write("absolute; Z-INDEX: "+ i +"; VISIBILITY: ");
document.write("visible; TOP: 15px; LEFT: 15px;\"><font color=\"blue\">");
document.write(",</font></div>");
}
else {
```



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

```
document.write("<div id=\"dot"+ i +"\" style=\"POSITION: ");
document.write("absolute; Z-INDEX: "+ i +"; VISIBILITY: ");
document.write("visible; TOP: 15px; LEFT: 15px;\"><font color=\"blue\">");
document.write(",</font></div>");
    }
  }
}
function initRain() {
a = 6;
r[i] = 1;
sn = Math.sin(a);
cs = Math.cos(a);
cx[i] = Math.random() * doc_width + 1;
cy[i] = Math.random() * doc_height + 1;
x[i] = r[i] * sn + cx[i];
y[i] = cy[i];
}
function makeRain() {
r[i] = 1;
cx[i] = Math.random() * doc_width + 1;
cy[i] = 1;
x[i] = r[i] * sn + cx[i];
y[i] = r[i] * cs + cy[i];
}
function updateRain() {
r[i] += s;
x[i] = r[i] * sn + cx[i];
y[i] = r[i] * cs + cy[i];
}
function raindropNS() {
for (i = 0; i < no; ++ i) {
updateRain();
if ((x[i] <= 1) || (x[i] >= (doc_width - 20)) || (y[i] >= (doc_height - 20))) {
makeRain();
doc_width = self.innerWidth;
doc_height = self.innerHeight;
}
document.layers["dot"+i].top = y[i];
document.layers["dot"+i].left = x[i];
}
setTimeout("raindropNS()", speed);
}
function raindropIE() {
for (i = 0; i < no; ++ i) {
updateRain();
if ((x[i] <= 1) || (x[i] >= (doc_width - 20)) || (y[i] >= (doc_height - 20))) {
makeRain();
doc_width = document.body.clientWidth;
doc_height = document.body.clientHeight;
}
document.all["dot"+i].style.pixelTop = y[i];
document.all["dot"+i].style.pixelLeft = x[i];
}
setTimeout("raindropIE()", speed);
}
if (ns4up) {
raindropNS();
}
else
if (ie4up) {
raindropIE();
}
// End -->
</script>
```

அன்பு வாசகர்களே நீங்களும் உங்களுக்குத் தெரிந்த ஜாலங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். தரமானவை இங்கு பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி
“ஜாவா ஸ்கிரிப்ட் ஜாலம்”
**கம்ப்யூட்டர் டுடே**
4C6 1/1, Fussele Lane, Colombo 06.


### திருத்தம்.

சென்ற இதழில் (டிசம்பர் மாத இதழ்) குறிப்பிடப்பட்ட ஸ்கிரிப்ட் இல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கவுரையானது அதற்கு முந்தைய பதிப்பில் கொடுக்கப்பட்ட ஸ்கிரிப்ட் இற்கான விளக்கமாகும். தவறுதலாக சென்ற இதழில் இடம் பெற்றுவிட்டது.

சென்ற இதழில் இடம் பெற்ற ஸ்கிரிப்ட் ஆனது உங்களது இணையத் தளத்தில் புள்ளி போன்ற தூரல்களை ஏற்படுத்தும்.

இம்முறை மேற்கூறப்பட்ட ஸ்கிரிப்ட் இன் மற்றுமோர் வடிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# custom cursor:


வாசகர்களே இந்த முறையும் நான் ஒரு ஃபிளாஸ் செயல்முறையுடன் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி இ வரையில் நாங்கள் அனிமேசன்களை உருவாக்குவது பற்றியும் அவற்றினை இயக்குவது பற்றியும் பார்த்தோம் இம்முறை சற்று வித்தியாசமாக ஒரு சிறிய Script ஒன்றினைப் பார்ப்போம்.

அதாவது நீங்கள் உருவாக்கிய அனிமேசன் காட்சிகளிலோ அல்லது சிறிய் மென்பொருட்களிலோ Standerd ஆக உள்ள Courser ஐ விடுத்து உங்களுக்கு விரும்பிய Courser ஒன்றை எவ்வாறு உள்ளீடு செய்வது என்பதைப் பற்றி இம்முறை பார்ப்போம்.


இது வரையில் நீங்கள் Movie Clip மற்றும் Button கள் அமைப்பது பற்றியும் அவற்றினை மெருகேற்றுவது பற்றியும் அறிந்துள்ளீர்கள் ஆதலால் அவற்றினை அதிகமாக இங்கு விளக்கவில்லை.

சரி இனி செய்முறைக்கு வருவோம்.


முதலில் நீங்கள் உங்களுடைய ஃபிளாஸ் தளத்தில் ஒரு Move Clip ஒன்றினைத் தயார் செய்யுங்கள். அதை உங்களின் விருப்பத்திற்கேற்றவாறு சில அனிமேசன்களையும் கொடுத்து உருவாக்கிக் கொள்ளுங்கள் ஆனாலும் அது ஒரு Courser போன்று தொழிற்பட இருப்பதால் அதற்கேற்றாற் போல் சிறியதாக அமைக்கவும்.



பின்னர் தளத்தில் உள்ள Movie Clip இன்மேல் இடது Click செய்து Action என்பதை கிளிக் செய்யவும் அப்பொழுது உங்களுக்கு Action Script Window தோன்றும்.




அதிலே Object - Movie - Mouse - Methods - Hide என்பதை கிளிக் செய்யவும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர்


Action - Movie Clip Control - Start Drug என்பதை கிளிக்செய்யவும்.





அப்பொழுது கீழ்கண்டவாறு ஒரு படிவம் தோன்றும்.




அதில் Target என்பதில் This என்று டைப்செய்து பக்கத்தில் உள்ள Expression என்ற Check பொக்ஸை கிளிக்செய்து விடவும்.





பின்னர் Action Script வின்டோவை மூடிவிட்டு உங்களில் அனிமேசனை இயக்கிப் பார்க்கவும். என்ன உங்களின் Cursor விளையாட்டுக் காட்டுகிறதா?

மீண்டும் இன்னுமோர் செயல்முறையுடன்.......!!

# நிலவு.com இன் திருக்குறள்-குறுவட்டு




இன்றைய தகவல்தொழில்நுட்ப உலகத்தில் ஏனைய நாடுகளுக்கு இணையாக எமது மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் நிலவு.com நிறுவனத்தினர் மாணவர்களின் கணினிக் கல்வி முதல் பாடசாலைக் கல்வி முறைகளை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக சொந்த தமிழிலே எங்களுடைய மாணவர்கள் கற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் சுயகற்றலுக்கான பல குறுவட்டுகளை வெளியிட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

அதிலே மிகவும் சிறப்பு வாய்ந்தது எதுவெனில் இந்த திருக்குறள் குறுவட்டுதான். இங்கே திருக்குறளின் பெருமைகளை நான் சொல்லாமலே நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். அத்தகைய குறளின் குறுவட்டானது - தமிழ் மாணவர்களுக்கு மட்டுமன்றி தமிழராகிய எவருக்கும் உதவக்கூடியதாக இருக்கும். இன்றை காலத்தை எடுத்துக்கொண்டால் மாணவர்களும் சரி மற்றவர்களும் சரி எந்த விசயத்தைப் பற்றி அறிய வேண்டும் என்றாலும் கணினியை நாடுகின்றார்கள். எடுத்துக்காட்டாக பெரும்பாலனவர்கள் இன்று கணினியில் உள்ள அகராதியைத் தான் தங்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்துகின்றார்கள். யாரும் முன்னர் போல் ஒரு பெரிய புத்தகத்தை தூக்குவது கிடையாது.

அது அவ்வாறு இருக்க திருக்குறளை ஏன் விட்டுவைக்க வேண்டும் என்று நினைத்தவர்கள். அதுவும் கணினியில் ஒளி மற்றும் ஒலி வடிவத்துடன் அழகாக ஒவ்வொரு குறளுக்கும் ஐந்து பேருடைய விளக்கவுரைகளைக் கொண்டு எளிதாக தந்துள்ளனர். திருக்குறளில் அகம் பொருள் இன்பம் என்ற தலைப்பின் கீழ் இருக்கக்கூடிய அதிகாரத்தில் எந்த அதிகாரத்தை வேண்டுமானாலும் எளிதாக தெரிவு செய்தாலும். அந்த அதிகாரத்தில் உள்ள குறள்களை ஒவ்வொன்றையும் தெளிவாக அதன் விளக்கங்களுடனும் உச்சரிப்புடனும் வடிவமைத்துள்ளார்கள். தமிழராகிய எமது ஒவ்வொருவருடைய வீட்டிலும் இருக்க வேண்டிய சிறந்த குறுவட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு.com

இதயம் குளிரும் இணையம்

www.nilavu.com



# DIGITAL HOME

## Digital Productions

Web Camera வில் இருந்து Special Effect களுடன் VCD ஆக மாற்றித் தரப்படும்.

உங்கள் புகைப்பட அல்பங்களை Digital முறையில் காலத்தால் அழியாத வகையில் மாற்றலாம்.

DVD 150/= முதல்

DVD, VCD, MP3, ACD Also Available



தமிழ் மென் பொருட்கள்- தமிழா, மின் அகராதி, மற்றும் Learning CDs - Flash, Word, Excel, SQL, Java, C++, PC Assembling.

**கம்ப்யூட்டர் ஜோதிடம்**

ஜாதகக் கணிப்புகள் பிறப்புப் பலன்கள்

திருமணப் பொருத்தம்

வருட பலாபலன்கள்

முழுமையான கணிப்புக்கள்

திருத்தமான தரவுகள்.



# Our Service

Web Desingning
Web Hosting

Advertising (web)
Advertisement Designing

Desktop Publishing
Printing
Image Editing
Book Publishing

Digital e-book Designing

Video Editing
Video Capturing
Sound works

Multimedia Designing
3D Modeling Designing
Animations

Learning CDs
Digital Printing

Computer Based Horoscope

Software Development
Computer Sales & Repair

Job Bank

# Dream Solutions (pvt) LTD.

4c6 1/1 Fussels Lane,
Wellawatta,
Colombo - 06

0 112 362 112




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லினக்ஸ் Linux

## பூச்சாண்டி காட்டும் கம்ப்யூட்டர் புலிகள்

**விண்டோஸ் பயனாளர்கள் மத்தியில் லினக்ஸ் ஆனது பயன்படுத்துவதற்கு மிகவும் கடினமான ஒரு ஆபரேட்டிங் சிஸ்டம் என்ற கருத்து இருக்கிறது. லினக்ஸைப் பரப்புவதில் படுதீவிரமாக இருக்கும் லினக்ஸ் அடிப்படைவாதிகளுக்கும் இதில் பங்கு இருக்கிறது. லினக்ஸ் பற்றி ரொம்ப காலமாக எழுதி வரும் பத்திரிகையாளர் ராபின் "ராப்லிமோ" மில்லர் இதைப் பற்றி எழுதிய சுவாரஸ்யமான கட்டுரையின் சுருக்கம் இது. . .**




புதிய பயனாளர்களுக்கு லினக்ஸைக் கற்றுக் கொடுக்கும் "குரு"க்கள் லினக்ஸைப் பயன்படுத்துவது மிகவும் கடினமான ஒரு விஷயம் போல் காட்டுகிறார்கள். லினக்ஸில் பவர்பாயின்ட் மாதிரி ப்ரெசன்டேஷன்களைத் தயாரிக்கலாம், ப்ளாஷ் அனிமேஷன் மற்றும் பல அம்சங்களைக் கொண்ட வலைப் பக்கங்களைப் பார்க்கலாம், விஷுவல் இன்டர்பேஸ்களின் உதவியுடன் க்ளிக் செய்து, நகர்த்தி, இழுத்து, டிராப் செய்து உங்கள் பைல்களை நிர்வாகம் செய்யலாம் - இதையெல்லாம் அவர்கள் விளக்கத் தவறி விடுகிறார்கள்.

லினக்ஸை புதியவர்களுக்கு சொல்லித் தருபவர்கள் அதி புத்திசாலிகளாக இருப்பதுதான் லினக்ஸைப் பயன்படுத்துவதில் இருக்கிற பிரச்னையோ?

லினக்ஸ் பயனாளர்கள் குழு ஒன்றில் எனக்குக் கிடைத்த அனுபவம்தான் இந்த சிந்தனை ஏற்படக் காரணம். லினக்ஸை கெர்னல் 1.0 வருவதற்கு முன்பிலிருந்தே பயன்படுத்தி வரும் அனுபவசாலி ஒருவரை எனக்குத் தெரியும். அவர் அங்கே தன் லேப்டாப்பில் லினக்ஸை அப்போதுதான் இன்ஸ்டால் செய்திருந்த ஒரு புதியவருக்கு மோடமை எப்படி இயங்கச் செய்வது (கன்பிகரேஷன்) என்று செய்து காட்டிக்கொண்டிருந்தார்.

கே.பி.பி.பி. இன்டர்நெட் டயலர்




இந்த குரு, கமாண்ட்கள் மூலம் இயங்கும் பழைய லினக்ஸ் கருவிகளைப் பயன்படுத்தினார். இப்படிச் செய்தால் ரொம்ப நேரம் ஆகும். இதற்கு கமாண்ட் மூலம் இயக்கப்படும் டெக்ஸ்ட் எடிட்டர் (இவர் vi என்ற எடிட்டரைப் பயன்படுத்தினார்) ஒன்று தேவைப்படும். அந்தப் புதியவர் அத்தனை கமாண்ட்களையும் பார்த்து ஒரேயடியாக மிரண்டு போனார்.

இதில் என்ன விடயம் என்றால் அவர்கள் இன்ஸ்டால் செய்த லினக்ஸ் விநியோகம் மாண்ட்ரேக் 8.0. இந்த மென்பொருளில் மோடமைக் கண்டுபிடிக்கவும் இயங்கச்செய்யவும் ரொம்ப சிம்ப்பிளான விஷுவல் கருவிகள் இருக்கின்றன. இதில் KPPP இன்டர்நெட் டயலரும் அடக்கம். KPPPயில் நாலைந்து க்ளிக் செய்து, உங்களுக்கு இன்டர்நெட் சேவை வழங்கும் நிறுவனத்தின் போன் நம்பர், உங்கள் யூசர்நேம்-பாஸ்வேர்ட் ஆகியவற்றை டைப் செய்தாலே இன்டர்நெட் இணைப்பு ரெடி.

அந்தப் புதிய பயனாளர் முழுசாக நம்பிக்கை இழப்பதற்கு முன் நான் மூக்கை நுழைத்து, மோடம் இணைப்பை எப்படி சுலபமாக க்ளிக் செய்து இயங்க வைப்பது என்று காட்டினேன் - சுமார் 30 நொடிகளில்.

கிராபிகல் கருவிகளைப் பயன்படுத்தி மோடமை செட்அப் செய்வது எவ்வளவு சுலபம் என்பதைப் பார்த்து அந்த லினக்ஸ் குரு, அந்தப் புதியவரைப் போலவே பிரமித்துப் போனார். ஆனால் அந்த குரு அதை அவ்வளவு சுலபமாகச் செய்ததில்லை. "கமாண்ட்கள் மூலம் செய்வதில் கிடைக்கிற ஏராளமான வசதியும் பலமும் எனக்குப் பிடிக்கும்" என்றார் அவர்.

ஏராளமான வசதிகளும் பலமும் நல்லதுதான். ஆனால் அன்றைக்கு எங்களுக்கு வசதிகளோ பலமோ தேவைப்படவில்லை. ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஒரு கம்ப்யூட்டரை இன்டர்நெட்டுடன் இணைக்கவும் அந்த கம்ப்யூட்டரின் உரிமையாளர் வீட்டுக்குப் போனதும் எப்படி சுலபமாக செட்டிங்ஸை மாற்றுவது என்று காட்டவும் விரும்பினோம், அவ்வளவுதான்.

பல வருடங்களுக்கு முன் எனக்கு ஒரு ஆபரேஷன் செய்யவேண்டியிருந்தது. நான் பால்டிமோரில் இருக்கும் ஜான் ராப்கின்ஸ் மருத்துவமனையிலோ அருகில் இருந்த சிறிய நர்சிங்ரோமிலோ சர்ஜரி செய்து கொள்ளலாம் என்றார் என் டாக்டர். "இது சாதாரண ஆபரேஷன்தான். உங்களுக்கு யாராலும் குணமாக்க முடியாத ஒரு விநோத வியாதி இருக்கிறது என்றால் ராப்கின்ஸில் இருக்கும் நிபுணர்கள் அருமையாக உதவுவார்கள். ஆனால் நமக்கு அவ்வளவு நிபுணத்துவம் எல்லாம் தேவையில்லை. அந்த நர்சிங்ரோமில் நோயாளிகளுக்கு ஆறு டிஜிட் நம்பர் இருக்காது. நர்ஸ்களுக்கு உங்கள் பெயர் தெரிந்திருக்கும்" என்றார் அவர்.

எனக்கு ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்தது என்பதை சொல்லத் தேவையில்லை. பொயின்ட் அண்ட் க்ளிக்" கிராபிகல் நிர்வாகக் கருவிகளுடன் லினக்ஸில் இயங்கும் இந்த லேப்டாப்பில் நான் இதை டைப் செய்துகொண்டிருக்கிறேன். ''எதையும் எளிமையாக பயன்படுகிற மாதிரி உருவாக்கவேண்டும்'' என்ற அணுகுமுறை ஆபரேஷனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமில்லை, லினக்ஸுக்கும் பொருந்தும்.

**பொயிண்ட் அண்ட் க்ளிக் லினக்ஸின் சக்தி**


லினக்ஸில் பவர்பாயின்ட் போல பிரெசன்டேஷன்களைத் தயாரிக்க முடியாது என்று எத்தனையோ பழம்பெரும் லினக்ஸ் பயனாளர்கள் பேசிக் கேட்டிருக்கிறேன். இது உண்மை இல்லை. ஏராளமான லினக்ஸ் புரோகிராம்கள் இதைச் செய்யும். மேஜிக்பாயின்ட் என்ற புரோகிராம்தான் நான் முதலில் கேள்விப்பட்ட ப்ரெசன்டேஷன் மென்பொருள்.

ஆனால் அப்போது புதிதாக வந்திருந்த ஸ்டார்ஆபீஸ் 5.2-ல் இருந்த ஸ்டார்ஆபீஸ் இம்ப்ரெஸ் என்ற மென்பொருளினை பயன்படுத்திப் பார்த்தேன். ஆச்சரியப்பட்டுப் போனேன். சட்டென்று என்னால் சிக்கலான ஸ்லைட் ஷோ பிரெசன்டேஷன்களை உருவாக்க முடிந்தது. பவர்பாயின்ட்டில் செய்த பிரெசன்டேஷனை இந்த புரோகிராம் மூலம் எடிட் செய்யக்கூட முடிந்தது. விண்டோஸ் பயனாளர்கள் பார்ப்பதற்காக இம்ப்ரெஸில் தயாரித்த ப்ரெசன்டேஷன்களை பவர்பாயின்ட் பார்மாட்டில் சேமிக்க முடிந்தது.

அப்படி இருந்தும் கூட, விண்டோஸ் பயனாளர்கள் மைக்ரோசாப்ட் ஆபீஸை வைத்துக்கொண்டு செய்கிற பணிகளை ஒரு பொயின்ட் அண்ட் க்ளிக் பயனாளர் எவ்வளவு சுலபமாகச் செய்ய முடியும் என்று எனக்குத் தெரிந்த பல அனுபவமுள்ள லினக்ஸ் பயனாளர்களுக்கு தெரியவில்லை.

ஸ்டார்ஆபீஸ் 5.2 யானை சைஸுக்கு இருக்கிறது, லோட் ஆக ஒரு யுகம் ஆகிறது, டெஸ்க்டாப்பை முழுங்கிவிடுகிறது. இதனால் இந்த சாப்ட்வேர் எரிச்சல் தருகிறது - குறிப்பாக

**காலியன் பிரவுசர்**



சின்ன சைஸில் இருக்கும் புரோகிராம்களை விரும்பும் பழைய யூனிக்ஸ் மனோபாவம் உள்ளவர்களுக்கு ரொம்பவே கடுப்பாக இருக்கும். இந்த புத்தி எனக்கும் இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனால் லினக்ஸில் டெக்னிகல் வேலை தவிர மற்ற வேலைகளை செய்வதற்காக இந்த மனோபாவத்தை அடக்கி வைக்கவேண்டியிருந்தது.

நான் ஸ்டார்ஆபீஸைத் தொடங்கிவிட்டு காபி சாப்பிடப் போய்விடுவேன். நான் வருவதற்குள் அது லோட் ஆகியிருக்கும். அது தொடங்கிய பிறகு விண்டோஸ் பயனாளர்கள் மைக்ரோசாப்ட் ஆபீஸில் செய்ய முடிகிற எல்லா காரியங்களையும் (அவர்கள் செய்ய முடியாத சில வேலைகளையும்) செய்யும். நான் இதைப் பற்றி இதற்கு மேல் பேசப் போவதில்லை. அப்புறம் உங்களுக்கு அதைப் பயன்படுத்தி ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்கும் த்ரில் கிடைக்காமல் போய்விம்.

**மேலும் சில விடயங்கள்**

ப்ளாஷ் அனிமேஷனைப் பயன்படுத்தும் வலைப்பக்கங்கள் சரியாகத் தெரிவதில்லை என்று புலம்பும் லினக்ஸ் பயனாளிகள் எக்கச்சக்கம். என்னால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. புதியவர்களுக்காகத் தயாரிக்கப்படும் பெரும்பாலான லினக்ஸ் விநியோகங்களில் ப்ளாஷ் 5 ப்ளக்-இன் ஒன்று கூட வருகிறது. அதை Debian போன்ற டெக்னிகலான லினக்ஸ் விநியோகங்களில் கூட பிரச்னை இல்லாமல் டவுன்லோட் செய்து இன்ஸ்டால் செய்துவிட முடியும்.

நெட்ஸ்கேப் 6.2, லேட்டஸ்ட் மோஜில்லா, காலியன், ஒபெரா ஆகியவை லீனக்ஸில் இயங்கும் நல்ல வெப் பிரவுசர்கள். காங்கரர் (Konqueror) பிரவுசரை தொடர்ந்து மெருகேற்றி வருகிறார்கள். லீனக்ஸ் ஈ-மெயில் புரோகிராம்களும் இப்போதெல்லாம் எல்லா ரசனைக்கும் கிடைக்கின்றன. அவற்றில் சிலது மைக்ரோசாப்ட் எக்ஸ்சேஞ்ச் சர்வரில் தகராறு இல்லாமல் இயங்குகின்றன.

லினக்ஸை சுலபமாகப் பயன்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் இந்த முன்னேற்றங்களுக்கும் "க்ளாசிக்" கமாண்ட் லைன் லினக்ஸுக்கும் சம்பந்தம் இல்லை. நாளுக்கு நாள் சிறப்படைந்து வரும் கிராபிகல் யூசர் இன்டர்பேஸ்தான் டெஸ்க்டாப் கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தின் எதிர்காலம் - அந்த டெஸ்க்டாப் எந்த ஆபரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கினாலும் சரி.

**கெர்னலை கம்ப்பைல் செய்யத் தெரியுமா?**

நானும் செய்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்வதற்காக ஒருமுறை கெர்னலை ரீகம்ப்பைல் செய்தேன். ஆனால் முக்கால்வாசி லினக்ஸ் பயனாளர்களுக்கு கெர்னலை ரீகம்ப்பைல் செய்யவேண்டிய அவசியமே இல்லை. உள்ளூர் லினக்ஸ் பயனாளர்கள் குழு உறுப்பினர்களின் உதவியுடன் மக்கள் அதை இன்ஸ்டால் செய்துவிடுகிறார்கள். இதனால் ஒரு சேதமும் ஏற்படுவதில்லை.

உங்களுக்குப் பிடித்த ஒரு விநியோகத்தைத் தேர்ந்தெடுங்கள். அதை நீங்களாக, அல்லது லினக்ஸுக்கான ஆட்டோமாட்டிக் அப்டேட் சேவைகளைப் பயன்படுத்தி அப்டேட் செய்யுங்கள். வருடத்திற்கு ஒரு சில தடவைகள் நீங்கள் பொயின்ட் அண்ட் க்ளிக்கைத் தாண்டி கமாண்ட்களை டைப் செய்யவேண்டியிருக்கும். அப்படி நீங்கள் போகும்போது உங்களை விட லினக்ஸ் அதிகம் தெரிந்தவர்கள் சொல்லிக் கொடுத்தபடி கவனமாக செயல்படுங்கள்.

**எவ்வளவு தெரிந்திருந்தால் நல்லது?**

பெரும்பாலான லினக்ஸ் பயனாளர்களுக்கு தங்கள் ஆபரேட்டிங் சிஸ்டத்தின் செயல்திறனை மெருகேற்றுவதில் ஆர்வம் இல்லை. லினக்ஸை இன்ஸ்டால் செய்து ஆடியோ - வீடியோவை இயங்க வைப்பது, டயல்-அப் / LAN / கேபிள் மோடம் /டி.எஸ்.எல். லைனுடன் இணைத்து, வெப்சைட்களைப் பார்ப்பது, ஈ-மெயில் அனுப்புவது / பெறுவது, எழுதுவது, கடிதங்களை ப்ரின்ட் எடுப்பது, வரவு செலவுக் கணக்கு போடுவது போன்ற சேவைகளைச் செய்யத்தான் விரும்புகிறார்கள். ஏனென்றால் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துபவர்களில் 99% பேர் 99% நேரம் தங்கள் கம்ப்யூட்டரில் இதைத்தான் செய்கிறார்கள்.

இந்த பட்டனைத் தட்டினால் இது நடக்கும் என்பது போன்ற விஷயங்களைத் தாண்டி எதுவும் தெரிந்துகொள்ள அவர்களுக்கு அவசியம் இல்லை. விண்டோஸில் தங்களுக்கு செய்யத் தெரிந்ததை எல்லாம் லினக்ஸில் எப்படி செய்வது என்று தெரிந்துகொள்ள ஆரம்பிக்கும் சமயத்தில் சிக்கலான

தொடர்ச்சி 40ஆம் பக்கம்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி கலைச்சொல் அகராதி

**A**

| | |
|---|---|
| **Analog model** | ஒத்திசை / தொடரிசை மாதிரிகை, மாதிரி |
| **Analog modem** | ஒத்திசை / தொடரிசை மொடம் |
| **Analog monitor** | ஒத்திசை / தொடரிசைத் தெரிவிப்பி |
| **Analog representation** | ஒத்திசை / தொடரிசை வடிவாக்கம், பிரதிநிதித்துவம். |
| **Analog Signal** | ஒத்திசை / தொடரிசைக் குறிகாட்டி |
| **Analog to digital converter** | ஒத்திசை / தொடரிசை இலக்க மாற்றி |
| **Analog transmission** | ஒத்திசை / தொடரிசை செலுத்தம் |
| **Analogical reasoning** | ஒத்திசை / தொடரிசை அறிதல் |
| **Analysis, cost** | செலவுப் பகுப்பாய்வு |
| **Analysis, system** | முறைமை(இ.வ) / அமைப்புப் (த.வ) பகுப்பாய்வு |
| **Analyst** | பகுப்பாய்வாளர் |
| **Analyst / designer workbench** | பகுப்பாய்வாளர் பணி இருக்கை |
| **Analyst, programmer** | செய்நிரல் பகுப்பாய்வாளர் |
| **Analyst, system** | முறைமை (இ.வ) / அமைப்பப் (த.வ) பகுப்பாய்வாளர் |
| **Analytical engine** | பகுப்புப் பொறி |
| **Anchor cell** | தாக்கு நிலைக் கலன் |
| **AND circuit** | AND சுற்று |
| **AND element** | AND மூலகம் (இ.வ) / முதன்மம் (த.வ) |
| **AND gate** | உம்மைப் படலை |
| **AND operation** | AND செய்பணி |
| **Animation** | அசைவூட்டம் |
| **Animation window** | அசைவூட்டு சாளரம் |
| **Annexure** | இணைப்பு |
| **Annotation** | விளக்கக்குறிப்பு |
| **Annotation symbol** | சுட்டு குறியீடு |
| **ANSI keyboard** | ANSI சாவிப் (இ.வ) பலகை / விசைப் (த.வ) பலகை |
| **Answer mode** | விடைப்பாங்கு |
| **Answer / originate** | விடையளி / தோற்றுவி |
| **Antecedent driven reasoning** | முன்னிகழ்வு ஏதுவாதம் |
| **Anti aliasing** | திரிபுத் திருத்தம் |
| **Anti static mat** | நிலைமின் தடுப்புப் பாய் |
| **Antidote** | முறிப்பான் |
| **Antiglare filter** | கூசொளி தடுப்புவடி |
| **Antivirus programme** | நச்சுநிரல் எதிர்ப்பு செய்நிரல் |

**வாசகர்களுக்கு...**
இதிலுள்ள தமிழாக்கம் தொடர்பான தங்களது கருத்துக்கள், ஆங்கிலச் சொற்களுக்கான வேறு தமிழ்ச் சொற் பதங்கள் அல்லது திருத்தங்கள் தொடர்பாக எமக்கு விபரமாக அறியத் தரவும்.

தொடர்புகளுக்கு:
**நிலவு.com,**
4C6 - 1/1, Fussels Lane,
Colombo -06.
T.P.: 0112 362 112
e-mail: info@nilavu.com

**நிலவு.com கணினி கலைச்சொல் அகராதியிலிருந்து தொகுக்கப்பட்டது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் இறக்கியவை








**www.yarlonline.com**

யாழ் மாவட்ட விபரங்களைத் தொகுத்துத் தரும் தளம்.
தேடல் வசதி, மின்னஞ்சல், தனிப்பட்ட இணைப்புப் பக்கங்களை உருவாக்கும் வசதிகளும் இதன் சிறப்பம்சங்கள்.
உங்கள் பதிவுகளுக்கு அழையுங்கள்:

**0112 362112**

இணையத்தில் இறக்கிய - இதயம் தொடும் புதுக்கவிதை:

## இரவு

-ஐ.ரவிக்குமார்

விழி மூடிய கருமைக்குள்
பல வண்ணங்களில்
வந்து செல்லும் பிம்பங்கள்

உறக்கமில்லா ஓர் இரவில்
விழி திறந்து எழுந்தமர்ந்தேன்
அறையிருளில்

ஒரு தாலாட்டாய் அறையெங்கும்
பரவியிருந்தது மின்விசிறியின்
சப்தம்

திறந்த ஜன்னல் வழியே
சுதந்திரமாய் வந்துகொண்டிருந்தது
நிலவு வெளிச்சம்

ஏதோ தூண்டுதலில்
கன்னத்தில் கைவைத்
நிலவைப் பார்க்க ஆ
சிந்தனைகளற்ற மன

முகத்தில் மோதிச்செ
சில்லென்ற குளிர்க் க

தொலைவிலிருந்து ெ
கேட்கும் நாய் குரைச்
சப்தம், எங்கள் மௌ
பலமாக்க...

மறைக்காமல் கலைந்
ஆரம்பித்தன மேகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுனாமி !

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையினால் மரணித்த மக்களை நினைவுகூரவும் - பாதிப்புற்ற மக்களுக்கு உதவி டக் கோரியும் உலகெங்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

நண்பர் ரொஜான், துபாயிலிருந்து அனுப்பிய மின்னஞ் சலில் எமக்கு வந்துசேர்ந்த படம் இது. மணல் சிற்பத்தின் மூலம் நடந்துபோன துயரச் சம்பவத்தை கண்முன் கொண்டு வந்திருக்கிறார்கள் சிற்பிகள்.

அருகில் கல்லறைக் கல் வடிவில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் இந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட் டவர்களுக்கு உதவச் சொல்லும் வாசகங்கள் பொறிக்கப்பட் டிருக்கின்றன.


USGS
Earthquake Hazards Program
Welcome to the U.S. Geological Survey Earthquake Hazards Program
Maps of Recent Earthquake Activity
Earthquake News & Highlights

http://www.earthquake.usgs.gov

உலகில் நில அதிர்வுகள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ள பிரதேசங்கள் தொடர்பான எச்சரிக்கையை விரிவாகவும் வரைபடங்களுடனும் தரும் தளம் இது. ஆசியக் கண்டம் தொடர்பான விபரங்களுக்கு:

http://www.earthquake.usgs.gov/recenteqsww/Maps/region/Asia.html




## முன்னும் - பின்னும்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இரண்டு பிரதேசங்கள், பாதிக்கப்பட முன்னும் பின்னுமான தோற் றங்கள் மேலே உள்ளன.

ஏற்பட்ட அழிவின் கொடூரம் இவற்றைப் பார்க்காலே தெரிகிறது. இப்படியான இன்னும் ஏராளமான புகைப்படங் கள் இணையத்தில் இருக்கின்றன - நடந்துபோன அழிவுக்கு ஆதாரமாக!

இணையத்தில் இறக்கியவை பகுதியில் உங்கள் தொகுப்புக்களும் இடம் பெறலாம். இணையத்தில் உங்களுக் குச் சிக்கிய விடயங்களில், மற்றவர் களோடு பகிர்ந்துகொள்ளலாம் என்று நீங்கள் எண்ணும் தொகுப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்!



தலில்
கவைத்தபடி
க்க ஆரம்பித்தேன்
மனதுடன்
திச்சென்றது
ிர்க் காற்று
ந்து மெலிதாய்
க்குரைக்கும்
மௌனத்தை
கலைந்து செல்ல
மகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்

## தமிழ் இணையம் 2004 சிங்கப்பூர் மாநாடு பற்றிய கண்ணோட்டம்.

**செல்லிடத் தொலைபேசியில் தமிழ், 'தமிழ்ப் பேச்சு உணர்வு' பற்றிய விடயங்களில் முக்கிய கவனம்.....!**

**- ஆர் . பாரதி -**

தமிழ் தகவல் தொழில்நுட்பத்தை வேறு முக்கிய தளங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய தேவை உணர்த்தப்பட்ட நிலையில், அதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கான பாதையை வகுப்பதாக ஏழாவது தமிழ் இணைய மாநாடு கடந்த டிசம்பர் 11, 12 ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் நடைபெற்று முடிவடைந்துள்ளது. எழுத்துரு, விசைப்பலகை போன்றவை தொடர்பாக தமிழ்க் கணினியாளர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை ஆராயும் நோக்குடனும், தமிழ் இணையத் துறையை ஒருங்கிணைந்த முறையில் முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டும் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் இணைய மாநாடு, இப்போது தமிழ்மொழி மூலமான உரையாடல்களைப் புரிந்து கொள்ளல் மற்றும் தமிழ் மொழியிலான குறுஞ்செய்திகளை (எஸ்.எம்.எஸ்.) செல்லிடத் தொலைபேசிகள் மூலமாக அனுப்புவது தொடர்பான விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு, யோசனைகளை முன்வைக்கும் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இரு தினங்களிலும் நடைபெற்ற ஏழாம் தமிழ் இணைய மாநாடு, 1997, 2000 ஆம் ஆண்டுக்குப் பிறகு மூன்றாவது முறையாக சிங்கப்பூரில் நடைபெற்றது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள கொள்கை ஆய்வுக் கழகத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில், உலகெங்கிலுமிருந்து அறுபதுக்கும் மேற்பட்ட கணினித்துறை வல்லுநர்கள் பங்கேற்று "நாளைய உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்" என்ற தலைப்பின் கீழ் இணையத் தமிழ் எதிர்காலத்தில் வளர்ச்சி காண வேண்டிய துறைகள் குறித்து விரிவான முறையில் விவாதிருக்கின்றார்கள். இதன் மூலம் சில பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு, அது மாநாட்டில் இறுதியில் வெளியிடப்பட்ட 'சிங்கப்பூர் அறிக்கை'யில் (Singaore Communiqu) தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இணையம் 2004 க்கு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அச்செய்தியில் "ஆங்கிலத்தில் உள்ள தகவல் களஞ்சியங்கள் தமிழர்களுக்குத் தமிழில் கிடைக்க வேண்டுமானால் அதை எந்த எந்த விதங்களில் நாம் அடைய முடியும் என்பதை இந்த மாநாட்டு நிபுணர்கள் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்" என்று இந்த அறிக்கையில் அவர் கேட்டுக் கொண்டிருக்கின்றார். மேலும், "இதுவரை நாம் ஒவ்வொருவரும் சிறுசிறு முயற்சிகள் செய்து தமிழ் இன்டர்நெட் வளர்ச்சிக்குப் பாடுபடுகிறோம். இந்த நிலை மாறி நமக்கு ஒரு பெரிய இலட்சியம் அவசியம்" என்றும் அவர் தன்னுடைய வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கின்றார். தமிழ் மொழியிலும் தகவல் தொழில்நுட்பத்திலும் நிறைந்த அறிவைக் கொண்டுள்ள இந்திய ஜனாதிபதி, தமிழ் இணைய மாநாடு செல்ல வேண்டிய பாதை எது என்பதைத் தெளிவாகக் காட்டியிருக்கின்றார்.



மாநாட்டில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

2000 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மாநாடு, கருத்தரங்கு, வணிகம், சமூக மையங்களைக் கொண்டிருந்தது. இதே அமைப்பு முறை பின்னர் நடைபெற்ற கோலாலம்பூர், சான் பிரான்சிஸ்கோ, சென்னை மாநாடுகளிலும் பின்பற்றப்பட்டன. "இம்மாநாடு முந்தைய மாநாடுகளிலிருந்து வேறுபட்டதாகும். ஒரே நேரத்தில் பல்வேறு தலைப்புகளில் நடைபெறும் விவாதங்களிலிருந்து விடுபட்டு ஒன்றன்பின் ஒன்றாக அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இம்முறை கருத்துப் பரிமாற்றத்துக்கும் ஆழமான விவாதங்களுக்கும் வழிவிடும் என்ற நோக்கில் பின்பற்றப்பட்டுள்ளது. இம்மாநாட்டுக்கு எழுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றிலிருந்து 20 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன" என்று நிகழ்ச்சி நிரல் அமைப்புக் குழுத் தலைவர் டாக்டர் கு.கல்யாணசுந்தரம் கூறினார். இந்தக் கட்டுரைகள் நூலாகவும், இறுவட்டுக்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

தொலைத் தொடர்பு சாதனங்களில் தமிழ் இணைய வழி தமிழ் கற்றல், பேச்சுணர்தல், யுனிகோட்டில் தமிழ் உள்ளிட்ட பல தலைப்புகளில் பேராளர்கள் இந்த இரு நாட்களில் கட்டுரைகளைப் படித்தனர். சிங்கப்பூர் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
# அனைத்துலக தமிழ் இணைய மாநாடு


TAMIL INTERNET 2004 SINGAPORE

## ஒரு சிறப்புப் பார்வை

இணைய ஒருங்கிணைப்புக் குழு, சிங்கப்பூர் தகவல் தொழில்நுட்ப வாரியம், மைக்ரோசொப்ட், மெக்ஸல், ஓரக்கில், ஆனந்தபவன் உணவகம், காயத்ரி உணவகம், சரவணபவன், ராயல் சாரி பலஸ், இந்து அறக்கட்டளை மற்றும் பாரதியார் நெட் போன்ற அமைப்புகளின் பேராதரவுடன் நடைபெற்ற இம்மாநாட்டைப் பற்றிய தகவல்களை சிங்கப்பூர், மலேஷிய தமிழ்ப் பத்திரிகைகளும் தொலைக்காட்சி, வானொலி என்பன மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

இம்மாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய உலகத் தமிழ் தொழில்நுட்ப மன்றத்தின் (உத்தமம்) தலைவர். முத்து நெடுமாறன், இம்மாநாடுகள் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களிடையே நல்ல ஆதரவைப் பெற்று வருவதோடு, பன்னாட்டு அமைப்புகளின் கவனத்தையும் ஈர்த்து வருவதாகக் குறிப்பிட்டார்.

“ஐம்பது பேரைக் கருத்தில் கொண்டு குறுகிய காலத்தில் வடிவமைக்கப்பட்ட இம்மாநாட்டுக்கு எதிர்பார்த்த அளவுக்கும் அதிகமானோர் பதிவு செய்தனர். தொழில்நுட்ப வல்லுநர்கள் பலரது ஆர்வத்தை அறிந்து மகிழ்வுறும் அதேவேளையில்,




இன்னும் அதிகமானோருக்கு இடமளிக்க முடியாததில் வருத்தமே” என்று சிங்கப்பூர் ஏற்பாட்டுக் குழுத் தலைவர், அருண் மகிழ்நன் கூறினார். ஆனால், பங்களிப்போர் விவாதங்களில் முனைப்போடு கலந்து கொண்டு சில தீர்மானங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து கணினித்துறையுடன் சம்பந்தப்பட்ட சுமார் பத்துக்கும் அதிகமானவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். பேராதனைப் பல்கலைக் கழகப் பொறியியல் துறைப் பேராசிரியரும் ஆய்வாளருமான சி.சிவசேகரமும் இம்மாநாட்டுக்கு ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். அவர் வருகை தராத நிலையிலேயே அக்கட்டுரை வாசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்தும் இம்மாநாட்டில் பேராளர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகப் பேராசிரியரான ரின் வின் லீ என்பவரும் இம்மாநாட்டில் பிரதான பாத்திரம் ஒன்றை ஏற்றிருந்தார். தமிழ் மொழியில் பெருமளவு பாண்டித்தியம் இல்லாத போதிலும் தமிழ் இணையத் துறையில் ஆர்வம்காட்டும் அவர், சிங்கப்பூரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் இணையத் தளத்தை உருவாக்குவதில் பின்னணியிலிருந்து செயற்பட்டவர். தமிழ் இணையம் தொடர்பாக விவாதங்களில் மிகவும் ஆர்வத்துடன் அவர் கலந்துகொண்டார்.

ஏழு அமர்வுகளாக இடம்பெற்ற இம்மாநாட்டில் தமிழ் இணையத்துடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன. நாளைய உலகுக்கு தமிழ் தகவல் தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் இதில் விரிவாக ஆராயப்பட்டன. யுனிகோர்ட், இணையம் வழிக் கல்வி, செல்லிடத் தொலைபேசிகளில் தமிழ் குறுஞ்செய்திகளை அனுப்புதல், தமிழ் மொழி மூலமான பேச்சுகளைப் புரிந்து கொள்ளும் தொழில்நுட்பம், மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு என பல்வேறு விடயங்கள் இரண்டு நாட்களும் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பிட்ட துறைகள் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டு, பின்னர் அது தொடர்பா... விரிவான விவாதங்களும் இடம்பெற்றன. பல்வேறு விடயங்களையுமிட்டு கருத்துப் பரிமாறுவதற்குக் கிடைத்த ஒரு சிறந்த வாய்ப்பு என இம்மாநாடு தொடர்பாக கருத்து வெளியிட்ட உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் (உத்தமம்) தலைவர் முத்து நெடுமாறன் குறிப்பிட்டார்.

மாநாட்டின் முடிவில் சிங்கப்பூர் மாநாட்டு அறிக்கையை வெளியிட்டு உரையாற்றிய தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் மாலன் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டார்:

“சிங்கப்பூர் மாநாடு, மிகவும் குறுகிய காலத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. ஐந்து மாதங்களுக்கும் குறைவான கால அவகாசத்திலேயே இதனை சிங்கப்பூர் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் அருண் மகிழ்நன் ஏற்பாடு செய்திருந்தார். முன்னைய மாநாடுகளிலிருந்து இது மிகவும் மாறுபட்டது. வழமையாக இம்மாநாட்டில் மூன்று அம்சங்கள் இருக்கும்.

1. மாநாடு, 2. பொதுமக்கள் அரங்கு, 3. மென்பொருட்களின் கண்காட்சி. வழமையான ஒரே நேரத்திலேயே பல அமர்வுகள் இடம்பெறுவதால், அனைவரும் அனைத்து அமர்வுகளிலும் கலந்து கொள்ள முடியாத நிலை இருந்தது. இம்முறை அது மாற்றப்பட்டு, அனைவரும் அனைத்து அரங்குகளிலும் கலந்து கொள்ளக் கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டது. பொது மக்கள் மத்தியில் தமிழ் தகவல் தொழில்நுட்பத்தை கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுதான் பொது மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
# அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

## ஒரு சிறப்புப் பார்வை

கலந்து கொள்ளும் அரங்கு ஏற்பாடு செய்யப்படுவது வழமையாக இருந்தது. இம்முறை போதிய கால அவகாசமும் நிதி ஒதுக்கீடும் இல்லாமையால் பொது மக்கள் அமர்வுகள் ஏற்பாடு செய்யப்படவில்லை. இதே காரணங்களால்தான் மென் பொருட் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்படவில்லை. தமிழ் மென்பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கு ஒரு சிறந்த சந்தை வாய்ப்பைக் கொடுப்பதாக மட்டுமன்றி, பேராளர்களும் பொது மக்களும் தமிழ் மென் பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டும்தான் இந்த மென் பொருட்களின் கண்காட்சி ஏற்பாடு செய்யப்படுவது வழமை. இவை அனைத்தும் இல்லாமல் பெருமளவுக்கு ஆரவாரமற்ற நிலையிலேயே இம்முறை மாநாடு நடைபெற்று முடிந்திருக்கின்றது.

தமிழ் தகவல் தொழில்நுட்பத்தை வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய தேவையை இம்மாநாடு தெளிவாக உணர்த்தியது. உதாரணம்: கைத்தொலைபேசி. கைத்தொலைபேசிகளில் தமிழைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராயப்படுவது இதுவே முதல் தடவையாகும்.



இது தொடர்பான முயற்சிகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு முகப்படுத்தப்பட்ட முறை ஒன்று கடைப்பிடிக்கப்படுவது முக்கியமானதாகும்.

பேச்சு உணர்வு மென்பொருட்களின் தயாரிப்புகளைப் பொறுத்தவரையில், பேச்சு வழக்கை உணரக்கூடிய ஒரு தொகுப்புத் தேவை என்பது இம்மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை கணினி விற்பன்னர்கள் மட்டும் செய்ய முடியாது. தமிழ் அறிஞர்களுடைய பங்களிப்பு இதில் முக்கியமானதாக இருக்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் பின்வரும் தீர்மானங்களை மாநாடு எடுத்துள்ளது:

பேச்சு உணர்வுக்கான மென்பொருளைத் தயாரிப்பதற்கு முன்னோடியாக, பேச்சுவழக்கு சொல் அகராதி ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்பதை மாநாடு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கான பணிக் குழு ஒன்றை "உத்தமம்" அமைக்கும். அடுத்த மாநாட்டுக்கு முன்னர் இதன் பணிகள் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. கைத்தொலைபேசி குறுஞ்செய்திகளைப் பயன்படுத்துவது தொடர்பான முயற்சிகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்த வேண்டிய தேவையையும் இம்மாநாடு வலியுறுத்தியுள்ளது.

2. இந்திய அறிவியல் கழகம் உலகளாவிய ரீதியில் மின் நூலகம் ஒன்றை அமைப்பதற்காக மேற்கொண்டு வரும் முயற்சிகளை மாநாடு வரவேற்றுள்ளது.

3. யுனிகோர்ட்டுக்கு மாற்றுமுறை முன்வைக்கப்பட்டது. அது தொடர்பாக மேலும் விவாதிக்கப்படும். தமிழ் விசைப பலகையைப் பொறுத்தவரையில் இணையத் தமிழ் மாநாட்டில் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் விசைப்பலகைக்கு தமிழக, இலங்கை அரசுகள் ஏற்கனவே அங்கீகாரமளித்திருக்கின்றன. உடனடியாக இதில் மாற்றங்கள் தேவையில்லை எனவும், அதனால் இதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மாநாடு தீர்மானித்துள்ளது".

இந்த மாநாட்டுத் தீர்மானத்தை மாலன் வெளியிட்டார். மாநாட்டின் இறுதியில் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது. இதில் இலங்கைத் தமிழர்களுக்கு இனிப்பான செய்தி ஒன்றும் கிடைத்தது. அடுத்த வருடம் இணையத் தமிழ் மாநாடு இலங்கையில் நடைபெறும் என்பதுதான் அந்தச் செய்தி. இது தொடர்பாக இலங்கை அரசு சார்பாக கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டிருப்பதாக "உத்தமம்" தலைவர் முத்து நெடுமாறன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பான ஏற்பாடுகள் பற்றி பேச்சுகள் நடத்தப்படும் என்வும் அவர் தெரிவித்தார். இலங்கையில் தமிழ் இணைய மாநாடு நடைபெறப் போகின்றது என்பது ஈழத் தமிழ் இணைய ஆர்வலர்களுக்கு உற்சாகமளிக்கும் ஒரு செய்திதான். ஏற்கனவே இரண்டு தடவைகள் இலங்கையில் இம்மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் நாட்டு நிலைமைகள் காரணமாக இறுதி வேளையில் அது ஒத்திவைக்கப்பட்டது. இப்போது போர் நிறுத்தம் நடைமுறையிலிருப்பது இதனை நடத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

**அடுத்த மாநாடு இலங்கையில்?**

அவ்வாறு நடைபெறுமானால் எங்கே?

- யாழ்ப்பாணம்
- கொழும்பு
- கிளிநொச்சி
- திருகோணமலை
- வவுனியா

நீங்களும் வாக்களிக்கலாம்
அனுப்புங்கள் ஒரு தபால் அட்டை
தமிழ் இணைய மாநாடு
கம்ப்யூட்டர் ருடே
4C6 1/1, Fussels Lane
Colombo 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7th Tamil Internet Conference
அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

ஒரு சிறப்புப் பார்வை

# தமிழ் இணைய மாநாடுகள் 1,2,3,4,5,6...

### நடந்தவை என்ன? முன்னோக்கிய ஒரு அலசல்.

## தமிழ் நெட் 97

முதலாவது மாநாடு தமிழ் நெட் 97 என்ற பெயரில் சிங்கப்பூரில் நடைபெற்றது இணையத்தில் தமிழ் வளங்களும் அவற்றின் செயற்பாடுகளுக்குமான சர்வதேச கருத்தரங்கு என்ற கோஷத்துடன் 1997 ஆம் ஆண்டு 17ந் திகதி 18ந் திகதி சிங்கப்பூரில் தேசிய பல்கலைக்கழகத்தின் கணினி மையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு இந்தியாவின் சட்டம் மற்றும் வெளிநாட்டலுவல்களுக்கான அமைச்சர் பேராசிரியர் எஸ். ஜெயக்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



இந்த முதலாவது மாநாட்டில் பின்வரும் முக்கியமான தலைப்புகளில் கலந்தாலோசிக்கப்பட்டு சில முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இணையத்தினூடான தமிழ் தகவல் வளங்களையும் சேவைகளையும். முன்னெடுத்துச் செல்வது.

இணையத்தைப் பாவிக்கும் தமிழ்ப் பாவனையாளர்களின் வேறுபட்ட கருத்துக்களையும். புதிது புதிதான எண்ணங்களையும். பகிர்ந்து கொண்டு அதற்கான அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவது. code Conversio, key board input methods, fomts Unicoad போன்ற விடயங்களில் சர்வதேசமெங்கும் பரந்து வாழும் தமிழர்களிடையே ஒரு தரப்படுத்தலை கொண்டு வந்து அதை இணையத்தின் ஊடாக அமுல்படுத்துவது.

தமிழ் தகவல் தொழில்நுட்பம் தமிழில் இன்று எந்தளவுக்கு இருக்கிறது. என்பது பற்றி மதிப்பிடுவது.

தமிழ் கற்றலுக்கான வளங்களையும் தமிழில் கற்றலுக்கான வழங்களையும் இணையத்தில் காட்சிப்படுத்துவது.

இந்த மாநாட்டிற்காக தமிழில் இணையத்தளங்களை பாவிப்பவர்கள் அதை வடிவமைப்பவர்கள் மற்றும் தமிழ் மென்பொருட்களை உருவாகுபவர்கள். அழைக்கப்பட்டிருந்தனர்.

## தமிழ் நெட் 99




இரண்டாவது மாநாடு 1999 ஆம் ஆண்டு "தமிழ் நெட் 99" என்ற பெயரில் இந்தியாவில் நடைபெற்றது. ''தமிழ் தகவல் தொழில்நுட்பத்தின் பாவனைக்கான சர்வதேச கருத்தரங்கும் மாநாடும்'' என்ற தலைப்புடன் பெப்ரவரி மாதம் 7ம் 8ம் திகதிகளில் அப்போதைய தமிழக முதல்வர் மு.கருணாநிதி தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தான் "தமிழ் நெட் 99 விசைப்பலகை" அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் ஒலியியலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதே இந்த விசைப்பலகை ஆகும். அதாவது இந்த விசைப்பலகையில் உயிரெழுத்துக்களும் (அ.ஆ.இ.........) அகரமேறிய மெய்யெழுத்துக்களும் (க.ங.ச..........) மட்டுமே காணப்படும். உதாரணத்துக்கு 'கொ' என்ற எழுத்தை பெறுவதற்கு "க" "ஓ" என்பதை அழுத்த வேண்டும். (கொ=க+ஓ) இதே போல் எமக்குத் தேவையான அனைத்து உயிர்மெய் எழுத்துக்களையும். நாம் பெற முடியும்.

இந்த விசைப்பலகை அமைப்பினை உத்தியோக பூர்வமாக அன்றைய தினமே தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அண்மையில் இலங்கை அரசும். இந்த விசைப்பலகையையே இலங்கைக்கான உத்தியோகபூர்வ தமிழ் விசைப்பலகையாக அறிவித்துள்ளது.

இந்த மாநாட்டின் இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், "தமிழ் நெட் 99-விசைப்பலகை" அமைப்பை சர்வதேசமெங்கும் வாழும் தமிழர்களும் ஏற்றுக் கொள்வது.

வெளிநாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயில்வதற்கு வசதியாக உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்குவது.

mono lingal encoding and bi-lingual encoding system பற்றி ஆராய தமிழக அரசு, மலேசிய அரசு, சிங்கப்பூர் அரசு, இலங்கை அரசு, பாண்டிச்சேரி அரசு ஆகிய ஐந்து அரசுகளின் பிரதிநிதிகளை கொண்ட குழு ஒன்றை அமைப்பது.

தமிழில் மென்பொருளை கொண்ட குழு ஒன்றை அமைப்பது. ஊக்குவிப்பதற்காக தமிழ். மென்பொருள் வளர்ச்சி நிதி உருவாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
# அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

## ஒரு சிறப்புப் பார்வை

### தமிழ் இணையம் 2000

மூன்றாவது அனைத்துலக மாநாடு "தமிழ் இணையம் 2000" இரண்டாவது தடவையாக சிங்கப்பூரில் 22ஆம் 23ஆம் 24ஆம் திகதி ஜுலை மாதம் 2000 ஆம் ஆண்டுநடைபெற்றது. இந்த மாநாடு மார்ச் மாதம் இலங்கையில் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும். பின்னர் எதிர்பாராத சூழ்நிலைமாற்றத்தால் சிங்கப்பூரில் நடாத்தப்பட்டது.

13.04.2000 அன்று தோற்றுவிக்கப்பட்ட தமிழ் இணைய ஒருங்கிணைப்புக் குழுவே இந்த மாநாட்டையும் குழு பொறுப்புக்களையும். ஒன்று நடாத்தியது.

இந்த மாநாட்டின் நிறைவில் "தமிழ் இணையம் 2000- சிங்கப்பூர் உடன்பாடு" என்று ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் முக்கியமாக கூறப்பட்ட விடயங்கள் வருமாறு.

உத்தமம் INFITT
உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்
International Forum for Information Technology in Tamil

இலங்கையின் அரசகருமமொழிகள் ஆணைக்குழு தயாரித்த தமிழ் கணினி கலைச்சொல் தொகுப்பை மாநாடு குறித்துக்கொண்டது. தமிழ் கணினிச் சொற்கள் குறித்து உலகளவில் உடன்பாடுகாண ஒருவலைத்தளத்தை ஆதரிக்குமாறு இலங்கை, இந்திய. சிங்கப்பூர் அரசுகளிடம் மாநாடு பரிந்துரை செய்தது.

தமிழ் மொழி தொடர்பில் ஒலியியல் எழுத்துரு கண்டறிதல், குரல் அறிதல் மேலோடிகள், தேடல் பொறிகள் மற்றும் பொறிவழி மொழிபெயர்ப்பு போன்ற முக்கிய தொழில்நுட்பங்களில் உடனடி கவனம் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

இணையவழிக் கல்வி என்பதை முக்கியத்துவப்படுத்தி அதற்கான ஒழுங்குகளை செய்தல்.

தேடல் பொறிகள் எளிதாக கண்டறிய வசதியான ஒரு எழுத்துக் குறியீட்டில் இணையத்தில் தமிழ் தகவல்களை உள்ளீடு செய்தல்.

தமிழ் கணினி, தமிழ் இணையம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பாடுபடும் அனைத்துலக அமைப்பான உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) என்று ஒரு அமைப்பு ஆரம்பித்தது.

### தமிழ் இணையம் 2001

தொடர்ந்து நான்காவது தமிழ் இணைய மாநாடு "முன்னேற்றத்திற்கான முன்னோடிகள்" என்ற கோஷத்துடன் முன்னெடுக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ம் திகதி 27ம் திகதி 28ஆம் திகதிகளில் மலேசியாவில் தலைநகரான கோலாலம்பூரில். உள்ள புத்ரா உலகவர்த்தக மையத்தில் நடைபெற்றது.

தமிழ் இணையம்
Tamil Internet
KUALA LUMPUR 2001

"முன்னேற்றத்திற்கான முன்னோடிகள்" எனும் தலைப்பில் நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழ் உலகில் இணைய மேம்பாடு மற்றும் பயன்பாடு குறித்த பல விடயங்கள் அலசி ஆராயப்பட்டன. இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்ட விடயங்களில் முக்கியமானவையாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

கணினிப் பயனீட்டினால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள்.
புதிய பொருளாதாரத்தில் வர்த்தகம்
வயர்லெஸ் பயனீடுகள்
தமிழ் இணையத்திற்கான தொழில்நுட்பத் தரங்கள்.

"தமிழ் இணையம் 2001" ஐ ஒட்டி "டுனியாவெப் 2001" என்ற ஒரு அனைத்துலக கண்காட்சி நடைபெற்றது. இதிலே மலேசியா, சிங்கப்பூர், இந்தியா மற்றும் பிறநாடுகளைச் சேர்ந்த இணையத் தொழில் நுட்பங்கள் அது தொடர்பான பொருட்கள் சேவைகள் என்பன கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

இந்த மாநாட்டிற்கான ஆதரவினை மலேசிய இந்திய காங்கிரஸ் வழங்கியிருந்தது.

### தமிழ் இணையம் 2002

ஐந்தாவது உலகத் "தமிழ் இணையமாநாடு - 2002" 2002 அமெரிக்க கூட்டு நாடுகளின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் ஆய்வியல் மையமும் தமிழ்பீடமும் இணைந்து நடத்திய இம் மாநாட்டின் கருப்பொருள் "எண்ணியப் பிளவின் மேல் பாலம் அமைப்போம்." என்பதாகும்.

இந்த மாநாட்டிற்கு கனடா, இந்தியா, இலங்கை, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து ஏறக்குறைய 200 பேராளர்கள் கலந்து கொண்டனர். கடந்த மாநாடுகளைப் போலவே இந்த மாநாட்டிலும் தொடரும் தலைப்புகளிலும்

தமிழ் இணையம்
Tamil Internet
2002
San Francisco Bay Area



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
## அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

### ஒரு சிறப்புப் பார்வை

புதிய த்லைப்புகளிலும் பலதரப்பட்ட பிரச்சினைகள் பற்றி சுமார் 50 பேச்சாளர்களால் அசலப்பட்டது. அவர்கள் தொழில்நுட்பம், உள்ளடக்கம் வணிகவளர்ச்சி ஆகியவற்றில் ஆழ்ந்த அக்கறை செலுத்தினர். மின் ஆளுமை, கணினி/இணையம் ஊடான தமிழ்கல்வி, Unicode இல் தமிழை அமைத்தல் செயற்படுத்தல், ஒளிவழி எழுத்துணர்தல் (ocr), தமிழில் இணையத் தேடுதளங்கள் கருவிவழி மொழிபெயர்ப்பு, தமிழில் பேச்சு உருவாக்கல் போன்ற தமிழ்மொழிசார்ந்த தொழில்நுட்பங்கள் இவற்றில் அடங்கும்.

இந்த ஐந்தாவது தமிழ் இணைய மாநாடானது. பலதரப்பட்ட புதிய திட்டங்களுக்கு வழிவகுத்தன அவற்றுள் சில வருமாறு.

தமிழ் வலைத்தள தேடுதல்.

தமிழ் பள்ளி கணினிக் கூடங்களுக்கான முன்னுருவாக்கப்பட்ட மென்கலங்கள்.

இணையவழி தமிழ் மின்னஞ்சல்

தமிழ் 'யுனிகோட்

ஒருங்கிணைப்புப் பற்றிய கலந்துரையாடல் குழு

மதுரைத்திட்டம்

தமிழ்மரபு அறக்கட்டளை (முதுசாம்)

மாநாட்டிற்கு முன்னதாக "தமிழ் இணையம் 2002" இன் அமெரிக்க அமைப்பாளர்கள் தமிழில் இணையப் பக்கங்களை அமைப்பதற்கான பன்னாட்டு போட்டி ஒன்றினை அறிவித்திருந்தனர். இரண்டு மாதங்களாய் நடைபெற்ற இந்தப் போட்டியில் நான்கு நாடுகளில் இருந்து 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டிலேயே "தமிழ் தகவல் தொழில்நுட்ப இளையோர் அணி" உருவாக்கப்பட்டது.

## தமிழ் இணையம் 2003

ஆறாவது அனைத்துலக தமிழ் இணையமாநாடான "தமிழ் இணையம் - 2003" இந்தியாவின் சென்னையில் 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்த மாநாட்டினை உத்தமம் அமைப்புடன், அண்ணா பல்கலைக்கழகம், மற்றும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தலைமையில் செயற்படும் தமிழ் நாடு ஏற்பாட்டுக்குழுவும் இணைந்து நடாத்தியது.

தமிழ் இணையம் 2003 அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில் ஆகஸ்ட் 22ம் திகதி நண்பகல் 12 மணிக்கு தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து மாநாடு மற்றும் கண்காட்சி என்பன சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டலில் நடைபெற்றது.


இந்த மாநாடு மற்ற மாநாடுகளில் இருந்து வேறுபட்டு மிகச்சிறப்பான ஒன்றாக நடைபெற்றது. இதிலே தமிழ் இணைய அகராதி ஒன்றினை உருவாக்குதல் பல மொழி ஒளிவகை எழுத்துணரியை வடிவமைப்பதில் உள்ள சிக்கல்கள் தமிழ் முதுசொம் காப்பகத்தின் தோற்றம், வளர்ச்சி, நீட்சி திரு.சுஜாதா அவர்களின் தமிழ்கணினி - சில சிந்தனைகள் இணைய வழி தமிழ்க்கல்வி, தகவல் தொழில்நுட்பத் தமிழ் கலைச் சொற்களை தரப்படுத்துதல், நிறைவான கற்றல் கற்பித்தலுக்கு பல்லூடகத்தின் பங்கு, தமிழ் இணைய பல்கலைக்கழகம், பார்வையற்றோருக்கான தமிழ் கணினி மேம்பாட்டுத் திட்டம் என்ற தலைப்புக்களில் ஆராயப்பட்டன.

அது மட்டுமல்லாமது தமிழ் எழுத்துக்களை சீரமைப்பது பற்றியும். டாக்டர் வா.செ.குழந்தைசாமி மற்றும் ஆவரங்கால் சின்னத்துரை ஸ்ரீவாஸ் (புலம் பெயர் இலங்கையர்) ஆகியோரது கட்டுரைகளும் அலசப்பட்டன.

சிலந்தி

சிங்கப்பூரில் நடைபெற்ற 7வது தமிழ் இணைய மாநாட்டு சிறப்பிதல் நடந்து முடிந்த ஆறு தமிழ் இணைய மாநாடுகள் பற்றியும் ஞாபகப்படுத்தும் ஒரு தொகுப்புக் கட்டுரை. ■

## கணினியுள் பூகம்பம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
## அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

ஒரு சிறப்புப் பார்வை

# தமிழில் யுனிகோட் குறியீடு ஒதுக்கப்பட்ட இடம் போதுமானதா?

**ஏழாவது தமிழ் இணைய மாநாட்டிற்கு முன்னதாக இணைய இதழ் ஒன்றிற்கான முத்துநெடுமாறன், அருண்மகிழ்நன், கு.கல்யாணசுந்தரம் ஆகியோரின் செவ்வி**



கே: தமிழ் இணைய மாநாடு 2004 இது குறித்து எங்கள் வாசகர்களுக்குக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

**முத்து நெடுமாறன்**

உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் ஏற்பாட்டில், ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் தமிழ் இணைய மாநாடு பல கூறுகளைக் கொண்டுள்ளதாகும். தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்தாலோசிக்கும் "மாநாட்டு மையம்", பொதுமக்கள் பயனுக்காக கண்காட்சி முதலிய நடவடிக்கைகள் அடங்கிய சமூக மையம், வணிக நோக்கில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தை விரிவாக்கம் செய்ய அமைக்கப்பட்ட வணிக மையம் - இதுபோன்ற மையங்களைக் கொண்டுதான் கடந்த நான்கு மாநாடுகள் நடத்தப்பட்டன. இவ்வாண்டு நடைபெறவுள்ள மாநாடு, சற்று மாறுபட்ட முறையில் மாநாட்டு மையத்தை மட்டுமே கொண்டிருக்கும். அதுவும் தொழில்நுட்ப கருத்துக்கள் மட்டுமே விவாதிக்கப்படும் அரங்கமாக அமைந்திருக்கும்.

கே: இதுபோன்ற மையங்களைக் கொண்டுதான் கடந்த நான்கு மாநாடுகள் நடத்தப்பட்டன என்கிறீர்கள்? கடந்த ஆறு மாநாடுகள் என்றிருக்க வேண்டும் இல்லையா?

**முத்து நெடுமாறன்**

ஆறு தமிழ் இணைய மாநாடுகள் நடைபெற்றிருந்தாலும், கடந்த நான்கு மாநாடுகளில் தான் மாநாட்டு கருத்தரங்குகளோடு மற்ற மையங்களும் சேர்க்கப்பட்டன.

கே: ஆறு மாநாட்டு முடிவிலும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா? என்னென்ன தீர்மானங்கள் செயல்படுத்தப்பட்டன என்று சொல்ல முடியுமா?

**முத்து நெடுமாறன்**

தீர்மானங்கள் என்பதைவிட "முடிவுகள்" என்பதே பொருத்தமாக இருக்கும். சில முடிவுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. வேறு சில, முயற்சி போதாமையால் முடங்கிக் கிடக்கின்றன. தமிழ்த் தகவல் தொழில்நுட்பக் கூறுகள் அனைத்திற்கும் உடனே ஒரு தரத்தை அமைத்துவிடவேண்டும் என்பது விவேகமான செயல் என்று நாம் கருதிவிட முடியாது - அது எளிதான செயலும் அன்று. காலமும் பயன்பாடும் தேவைகளை அறிமுகப்படுத்துகின்றன, தொழில்நுட்ப வல்லுநர்கள் அந்தத் தேவைகளுக்கேற்பத் தீர்வுகளைக் காண்கின்றார்கள் - தமிழ் இணைய மாநாடுகளில் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள். பொருத்தமான ஒரு தீர்வாக இருந்தால் - பலரின் பாராட்டையும், ஏற்பையும் அந்தத் தீர்வுகள் பெறுகின்றன.

ஆனால், அடிப்படையான சில கட்டமைப்புகளுக்கு விரைவான தீர்வுகள் - முடிவுகள் தேவை. இவை கட்டிடத்தின் அடித்தளம் போன்றவை. கட்டிட அமைப்பு எந்த வடிவில் வந்தாலும், அடித்தளம் என்பது அத்தியாவசியத் தேவை.

தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்த வரையில், குறியீட்டு முறையும், விசைப்பலகை அமைப்புமே அந்த அத்தியாவசியத் தேவைகள். அவையிரண்டும், உத்தமம் மாநாடுகளின் முடிவுகளால்தான் ஒருமுகப்படுத்தப்பட்டு இப்போது பரவலாக நடப்பிலிருக்கின்றன.

இப்போதைய தேவைக்கு ஏற்றவாறு இன்னும் சில முடிவுகளையும் இப்போது பரிசீலித்து வருகிறோம். பரிந்துரைகள் உறுதியானதும் வெளியுலகத்திற்கும் தெரியவரும்..

கே: ஆறு மாநாட்டு முடிவுகளில் சில செயல்படுத்தப்பட்டுள்ளன. வேறு சில முயற்சி போதாமையால் முடங்கிக் கிடக்கின்றன, என்கிறீர்கள். யாருடைய முயற்சி போதாமை என்பதை தெளிவுபடுத்துவீர்களா?

**முத்து நெடுமாறன்**

தனிப்பட்ட ஒருவரின் முயற்சியின்மை என்று நாம் சொல்ல முடியாது. பணிக்குழுக்கள் அமைக்கும்போது இருக்கின்ற ஆர்வம் - தொடங்கப்பட்ட பணி முடிக்கப்படும் வரை நீடிப்பதில்லை. எனவேதான் பணிக்குழுக்களைத் தொடங்குவதற்கும் சில விதிமுறைகளை அமைத்திருக்கின்றோம். நோக்கங்கள் மற்றும் விளைவுகள் இவற்றைத் தெளிவாக விவரித்தாலன்றி பணிக்குழுக்களை அமைப்பதில் எந்த பயனும் இல்லை.

கையெழுத்தைக் கணினி வழி அடையாளம் காண்பது போன்ற முயற்சிகளுக்குத் தொடக்கத்தில் ஆர்வம் இருந்தது - அது சற்றுக் குன்றி இருக்கிறது. மீண்டும் ஆர்வம் உள்ளவர்கள் ஒன்றுகூடி இந்தத் தேரை இழுக்க முன்வந்தால் தான் சக்கரம் பூட்டுவது என்று முடிவுசெய்துள்ளோம். மேலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
# அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

## ஒரு சிறப்புப் பார்வை

அந்தந்த நாடுகளில் தமிழ் இணைய மாநாடுகள் நடக்கும் போது ஏற்படுகின்ற மனவெழுச்சி, உற்சாகம் மிக விரைவிலேயே அடங்கிப் போய்விடுகின்றது. இணையத்தின் வளர்ச்சி "உத்தம"த்தின் உறுப்பினர்களையும் தாண்டி பல்வேறு கைகளுக்குப் போகும் போது தான் அது வேரூன்ற முடியும்.



கே: "நாளைய உலகில் தமிழ்தகவல் தொழில்நுட்பம்" எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு முக்கியமான தொழில்நுட்பப் பிரச்னைகளை அலசவிருக்கிறதாக உத்தமம் இணையதளம் அறிவிக்கிறது. அப்படி என்ன விதமான தொழில்நுட்பப் பிரச்னைகள அலசி ஆராயவுள்ளது?

கு. கல்யாணசுந்தரம்

மாநாட்டில் படைக்கப்படவிருக்கும் கட்டுரைகள், தமிழ் வரிவடிவத்திற்கும் ஒலிவடிவத்திற்கும் இடையே இயங்கும் (speech synthesis / voice recognition) தொழில்நுட்பங்களைப் பற்றியும், பலதரப்பட்ட குறியீட்டு முறைகளை ஒருமுகமாக இயக்கும் செயலிகள், தேடும் கருவிகள் பற்றியும், செல்பேசிகள் முதலிய புதிய கருவிகளில் தமிழ் பற்றியும், செயலிகள் நிரல்கள் இவற்றைத் தன்மொழியாக்கம் (Localisation) செய்வதைக் குறித்தும் தமிழ் மரபு வளங்களை மின்-வழி பாதுகாப்பது/பதிப்பிப்பது பற்றியும் மின்-வணிகம், மின்-ஆளுமை முதலிய அங்கங்களைப் பற்றியும் ஆராயவிருக்கின்றன.

கே: தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளில் கணினியும் இணையமும் முற்றிலும் அவரவர்கள் மொழியிலேயே (விதவிதமான எழுத்துரு இன்றி) பயன்படுத்தப்படுகின்றன (உதாரணமாக, ஜப்பானியர்களும் ஜெர்மானியர்களும்). துரதிர்ஷ்டவசமாக தமிழில் நாளும் ஒரு எழுத்துருவாக இணைய இதழ்கள் இருக்கும் நிலை. 2000ம் ஆண்டு மாநாட்டில் தமிழ் எழுத்துருக்களுக்கு ஒரே ஒரு தகுதரம் தான் என தீர்வு காண முயற்சிக்கப்பட்டது. இந்த 2004 மாநாடு இதில் ஒரு தீர்வு ஏற்பட முயலுமா?

முத்து நெடுமாறன்

இது ஒவ்வொரு மாநாட்டிலும் எழுப்பப்படும் கேள்வி!

எந்தவிதத் தரமும் இல்லாத போது, ஆயிரக்கணக்கான குறியீடுகள் இருந்தால், அவரவர் சொந்தக் குறியீட்டு முறையை நாளுக்கு நாள் அறிமுகப் படுத்துவதில் அர்த்தம் இருக்கும் - இது 1999க்கு முந்திய நிலை.

இன்று, ஆயிரத்தில் இருந்து இரண்டே 8பிட் குறியீட்டு முறை இணையத்திற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர்த்து, ஒருமுகப்படுத்தப்பட்ட குறியீடான யூனிகோட் அமைப்பும் உள்ளது. இவற்றை விட்டுவிட்டு, சற்றும் தொடர்பில்லாத ஒரு குறியீட்டை அமைத்து செயல்படுகிறார்கள் என்றால், ஒரே குறியீட்டை அறிவித்தால் இந்த நிலை மாறும் என்று நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது?

ஒரே குறியீட்டு முறை வரவேண்டும் என்பது தமிழ்த் தகவல் தொழில்நுட்ப வளச்சியில் நாட்டம் உள்ள ஒவ்வொருவருடைய எண்ணம். அந்த நிலை ஏற்படுவதற்குத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே உழைத்தால் போதாது. பயன்பாடு அதிகரிக்க வேண்டும்.

கே: ஒரே குறியீட்டை அறிவிக்க வேண்டும் என்று மாநாடு அரசுகளுக்கு பரிந்துரை செய்வதின் மூலம், அரசுகள் அதை அதிகாரப்பூர்வமாக அறிவித்தால் பலன் கிடைக்குமே?

முத்து நெடுமாறன்

தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி, தீர்வுகள் அடிப்படையில் தான் அமைந்திருக்க வேண்டும். திறவூற்று அடிப்படையில் தொடங்கப்பட்ட முயற்சிகளின் வேரும் அதுவே. இப்போது புழக்கத்தில் இருக்கின்ற 8பிட் குறியீட்டுமுறை மாறப்போகும் ஒன்று. இதை வலுக்கட்டாயமாகத் திணிப்பது பொறுத்தமற்றது. 16பிட் செயல்படுவதற்குத் தேவையான கணினிமுறைகள் பரவலான பயன்பாட்டிற்கு வர இன்னும் சிறிது காலம் பிடிக்கும். எனவே, இது குறித்து அவசரமான முடிவை எடுக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பது எமது கருத்து.

தகுதரம் (TSCII) அல்லது (TAB) முறையைப் பயன்படுத்துபவர்கள் யூனிகோட்டிற்கு மாறும்போது அவர்களுக்குத் தேவையான கருவிகள் இப்போது பல இருக்கின்றன. இதன் பயன்பாட்டின் எளிமை புலப்படும்போது, மாற்றம் தானகவே ஏற்படும்.

கே: யூனிக்கோடில் தமிழுக்கான இடம் போதவில்லை என்று யூனிக்கோடு கன்சார்டியத்தில் உத்தமம் குரல் எழுப்பியுள்ளதா? கன்சார்டியத்தில் உறுப்பினராயுள்ள இந்திய அரசு மற்றும் தமிழக அரசு இதற்காக குரல் கொடுத்துள்ளதா?

முத்து நெடுமாறன்

யூனிகோட் குறியீட்டு முறையில் இடம் போதவில்லை என்பது தவறான ஒரு கருத்து. இதை அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர். உலகத்தில் உள்ள அனைத்து வரிவடிவங்களுக்கும் ஒரே குறியீட்டு முறையை வழங்கும் நோக்கில் தொகுக்கப் பட்ட யூனிகோட் அமைப்பில், வரிவடிவங்கள் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் அவற்றை "Alphabetic", "Syllabic", "Ideographic" என்று கூறுவார்கள்.

"Alphabetic" பிரிவுலத்தின் வரிவடிவத்தை மூலமாகக் கொண்ட மொழிக் குடும்பத்திற்கும், "Syllabic" பிரிவு இந்திய மொழிக்குடும்பத்திற்கும் (தாய், சிங்களம் உட்பட) "Ideographic" பிரிவு சீன, ஜப்பானிய, கொரிய மொழிகளுக்கும் ஏற்புடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பைப் பொறுத்த வரையில், தமிழுக்குத் தேவையான இடங்கள் உள்ளன - மாதம், வருடம், மேற்படி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாய் முதலிய கூடுதலான எழுத்துக்கள் கூட சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் வரிவடிவத்திற்கு "Syllabic" அமைப்பு வழங்கப்பட்டுள்ளது பொருத்தமான ஒன்றல்ல என்று சில தொழில்நுட்ப வல்லுநர்களும் மொழி அறிஞர்களும் கருதுகிறார்கள். இந்தக் கருத்தை ஆய்வு செய்வதற்காகவே WG08 எனப்படும் பணிக்குழு ஒன்றை உத்தமம் அமைத்துள்ளது. இந்த குழுவின் இறுதி அறிக்கை கிடைத்தவுடன் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கே: என்னுடைய கேள்விக்கு நேரடியான பதில் இல்லையே...?

**முத்து நெடுமாறன்**

கேள்வியிலேயே தவறு இருக்கிறதே. யூனிகோட் குறியீட்டுமுறையில் தமிழுக்கு இடம் போதாது என்ற கூற்று தவறானதாகும் - அதைத் தெளிவுபடுத்த வேண்டும் அல்லவா?

கே: WG08 பணிக்குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் யார்யார் என்று சொல்ல முடியுமா?

திரு. இளங்கோவன் (தலைவர்)
திரு. செல்லப்பன்
முனைவர் கிருஷ்ணமூர்த்தி
திரு. மணி மணிவண்ணன்
முனைவர் மு பொன்னவைக்கோ
திரு. பிரேம் குமார்




கே: கணினி வல்லுனர்கள் மட்டுமே கலந்துகொள்கின்ற மாநாடா இது?

**அருண் மகிழ்நன்**

ஆமாம். கடந்த மாநாடுகளில் தொழில் நுட்பம் சாராத கட்டுரைகளுக்கும் இடமிருந்தது. எனவே வேறு பலரும் கலந்து கொண்டார்கள். இந்த முறை, முழுக்க முழுக்கத் தொழிநுட்ப மாநாடு என்பதால், தொழில் நுட்ப வல்லுனர்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள்.

■ இணையத் தள ஆய்வு

# www.wilyhacker.com




நீங்கள் இன்டர் நெட் பயனாளராகவோ அல்லது உங்கள் கணினி இன்டர் நெட்டுடன் இணைக்கப்பட்டிருந்தாலோ இந்தத் தளம் உங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் அந்தளவுக்கு பயன் உள்ள ஒரு தளம் தான்

இன்டர் நெட்டில் கிருமினல்களும் விசமிகளும் அண்மைக்காலமாக மிகவும் அதிகரித்து விட்டனர். தமது தேவைகளை நிறைவேற்றவும் சுலபமாக பணம் சம்பாதிக்வும் என கிருமினல்கள் பல நாசகார வேலைகளை இன்டர் நெட் ஊடாக செய்துவருகிறார்கள். அது மட்டுமல்லாமல் பொழுதுபோக்கிற்காகவும் ஒரு காரணம் இல்லாமலும் பல இன்டர் நெட் ஊடாக விஷமிகள் கூட இவ்வாறான நாசகார வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே மிக வலுவான ஒரு பூட்டு போடவில்லையென்றால் உங்கள் இணையத்தளமும் சரி அல்லது இன்டர்நெட்டில் இணைந்துள்ள உங்கள் கணினியும் காலியாகிவரும் அபாயம் உள்ளது. தகவல் திருட்டும் சேதமும் இன்று இன்டர்நெட் உலகில் சகஜமாகிவிட்டது. இதனை தவிர்ப்பதற்கு Firewall என்ற மென்பொருள் மிகவும் உபயோகப்படுகிறது. இந்த மென் பொருளானது யார் யாரையெல்லாம் உங்கள் வலையமைப்பில் அல்லது கணினியில் என்று பார்த்து உங்கள் அனுமதி கேட்டு அதன் பின்னரே உள்ளே விடுகின்றது.

இவ்வாறான இந்த Firewall பற்றிய ஒரு முழுமையான விளக்கத்தை நிங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினால் www.wilyhacker.com என்ற இந்த தளத்தை பார்ப்பது அவியம்.




அந்தக்காலத்தில் முதலில் வந்த சில Firewall களை உருவாக்கிய வில்லியம் செஸ்விக், ஸ்டீபன் எம்.பெல்லோவின் என்ற இரண்டு தகவல் பாதுகாப்பு நிபுணர்கள் எழுதிய புத்தகம் தான் "Firewall and Internet Security" இந்தப் புத்தகத்தினை முழுமையாக இணையத்தளத்தல் போட்டிருக்கிறார்கள். இதில் குசைநறயடட களை எப்படி அமைப்பது பாதுகாப்பான மென்பொருட்கள் இணையத்தில் எங்கெல்லாம் கிடைக்கும் என்பது போன்ற மிகத் தேவையான விடயங்களை விளக்கும் என்பது போன்ற மிகத் தேவையான விடயங்களை விளக்குகின்றது. இந்தத் தளம் இதை தனித்தனி அத்தியாயங்களாகவோ அல்லது ஒரு படியாகவோ PDF வடிவத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
## அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

**ஒரு சிறப்புப் பார்வை**

# உலகத் தமிழிணைய 7 வது மாநாடு ஒரு எதிர்பார்ப்பு!

**சத்தி சக்திதாசன், இலண்டன்**

உலகத் தமிழ் இணைய 7 வது மாநாடு சிங்கப்பூரில் வரும் 11ம் , 12ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் செய்தி, உலகத்தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழைக் கணினியில் முதன்மைப்படுத்தி , இணையத்தின் வாயிலாக இலக்கிய வளர்ச்சியை அடுத்த நூற்றாண்டை நோக்கி நகர்த்தும் முயற்சியில் , உலகெங்கும் வாழும் பல தகவல்த் தொழில்நுட்ப வல்லுனர்களான தமிழ்ர்கள் பல சாதனைகளைக் காலத்துக்குக் காலம் நிகழ்த்தி வருவது நாமெல்லோரும் அறிந்ததே.

இப்படிப்பட்ட தனிமுயற்சிகளை ஒருங்கிணைத்து இம்முயற்சிகளை வலுவுள்ள ஒரு தமிழ்மொழிவளர்ச்சியை நோக்கிக் கூர்மைப்படுத்துவததைப் பின்னனியாகக் கொண்டே "உத்தமம் " ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

முதல் மகாநாடு தமிழ்நெட் 97 என்ற பெயரில் முதன்முதலாக சிங்கப்பூரில் கூட்டப்பட்டது. இந்த முதல் மகாநாட்டில் இதன் கொள்கைகளாக, தமிழ்க் கண்ணி மற்றும் இணையம் சம்மந்தமான தகவல் தொழில்நுட்பத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆராய்வுகள் பலதரப்பட்ட தமிழ் இணையத்தள பாவனையாளர்களின் கலந்தாலோசிப்புக்களின் உதவிகளோடு , தமிழ் இணையத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான வழிமுறைகள் அது போகும் பாதைக்கான திசைகள் என்பன பற்றிய கருத்தாய்வுகள் ஒரு சர்வதேச தளத்தைத் தமிழ் இணைய ஆரய்ச்சியாளர்களுக்கு பின்வரும் பிரிவுகளில் ஏற்படுத்திக் கொடுப்பது.

1) இயந்திரமொழி மாற்றியமைத்தல்
2) தமிழ் விசைப்பலகை இயக்கம்
3) தமிழ் எழுத்துரு
4) யூனிகோடுவை தமிழ் இணையத்தளங்களின் பாவனையாக மாற்றத்தேவையான நடவடிக்கைகள்.

தமிழிணையத்தின் சமகால நடவடிக்கைகளைக் கண்டுபிடிப்புக்களை சகல இணையப் பாவனையாளர்களுக்கும் அறியப்படுத்தல்,ெ தமிழ்க் கல்வி சம்மந்தமான ஆரய்ச்சிகளையும் மென்பொருளையும் காட்சிக்கு வைக்கும் ஒரு மையமாக இதனைச் செயற்படுத்துவது என்பவை முன்மொமொழியப்பட்டது. அதன் பின் பின்னர் இதன் இரண்டாவது மகாநாடு 1999 லும் அதைத் தொடர்ந்து வருடாவருடமும் இம்மகாநாடு நடைபெற்று வந்துள்ளது.

இந்த எட்டு வருட காலத்தில் இணையத்தில் தமிழ் கண்ட முன்னேற்றம் கணக்கிலடங்கா . இணையத்தில் நாளுக்குநாள் பெருகிவரும் தமிழ் இணையத்தளங்களின் எண்ணிக்கையே இதற்குச் சான்றாகிறது. அது மட்டுமின்றி இந்த இணையத்தளங்களின் தரம் மிகவும் முன்னேறியுள்ளது.

இந்த முன்னேற்றம் தமிழகத்திலிருந்து வெளிவரும் முன்னனிச் சஞ்சிகைகளான விகடன், குமுதம், கல்கி போன்றவற்றையும் , முன்னனியில் திகழும் தமிழ் நாளிதழ்களையும் இணையத்தில் பங்குபெறச் செய்துள்ளதுடன் , இணையத்தின் வளர்ச்சியைக் கணக்கிலெடுக்க வேண்டிய காலகட்டாயத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றன.

இந்தத் துரித வளர்ச்சிக்கு "உத்தமம்" நேரிடையாக தனது பங்கையளித்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. உத்தமம் அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டு முன்னனியில் இருந்து பங்காற்றும் தமிழறிஞர்கள் பலரின் கண்டுபிடிப்புக்களே இன்று இணையத்தளப் பெருக்கத்துக்கு வழிகோலியுள்ளது.

"முரசு" மென்பொருளாக்கத்தின் உருவாக்கிய திரு.முத்து நெடுமாறன், "மயிலை" மென்பொருளினை உருவாக்கிய டாக்டர்.கலியாணசுந்தரம் , என இவர்களின் பங்களிப்புக்களின் பட்டியல்கள் நீண்டு கொண்டே போகிறது.

இவை தவிர "இ-கலப்பை" முன்னோடி திரு முகுந்தராஜ் , "அழகி" அமைப்பாளர் திரு விஷி விஸ்வநாதன் எனும் இளம் தலைமுறையின் அரிய கண்டுமிடிப்புக்கள், தமிழ் மென்பொருளாக்கம், இணையத்தள எழுத்தாளர்களின் ஜீவநாடியாகத் திகழ்கின்றது.

இவையனைத்தையும் ஒருங்கிணைத்து "உத்தமம்" ஒரு அழகிய தமிழ் மலர்கள் நிறைந்த ஒரு தமிழ்மாலையாக அழகுறவேண்டும்.

இன்று இந்த ஏழாவது மாநாடு எனும் இந்த அவசியமான கருத்தரங்குக்குள் தமிழுலகு காலடி எடுத்து வைக்கும் போது ஒரு சாதாரண உலகத்தமிழனின் பார்வையில் இந்த அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி என்ன எதிர்பார்ப்புக்கறெழுந்திருக்கின்றன என்னப் பார்ப்பது , இந்தச் சந்தியில் பொருந்தும் என எண்ணுகிறேன்.

தமிழில் கணணியை இயக்கி இணையத்தளத்தில் உலா வரக்கூடிய ஒரு நிலமை இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த சாதகமான நிலைமை மூலை முடுக்குகளிலிருக்கும் சாதாரண மக்களையும் இணையத்தில் ஈடுபடுத்தி , அதன் அனுகூலத்தை அவர்களும் பருகக்கூடிய ஒரு நிலைமையைத் தோற்றுவிக்க இப்படியான மகாநாடுகள் நிச்சயம் வழிகோலும் என்று நம்புகிறேன்.

இதன் சாத்தியத்திற்கு இரண்டாம் படியிலுள்ள தமிழ் உள்ளங்கள் தமது உழைப்பை ஒன்றுதிரட்டி ஊன்றுகோலாக அமைய வேண்டும். உத்தமம் அமைப்பை ஓர் உன்னத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
# அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

## ஒரு சிறப்புப் பார்வை

அமைப்பாக கட்டியெழுப்ப அறிஞர்கள் மட்டத்தில் அவர்கள் பங்காற்றும் அதேவேளை அதன் கண்டுபிடிப்புக்கள் , அதன் உபயோகம் , அதன் இலகுமுறை என்பன இணையத் திறமைசாலிகளால் மக்கள் மத்தியில் பரவலாக எடுத்துச் செல்லப்படவேண்டும். அப்படியில்லாவிட்டால் இந்த நல்ல மனிதர்களின் உழைப்பின் அர்த்தத்தை இழந்தவர்களாவோம்.

இன்னொரு எதிர்பார்ப்பாக எதிர்காலப் புலம்பெயர்ந்து வாழும் இளம்சந்ததியினரின் தமிழ்க் கல்வி, இலக்கிய ஈடுபாடு என்பன எடுத்துக் கொள்ளப்படவேண்டியிருக்கிறது. இன்று தமிழ் வளர்வதற்குத் தமது நாட்டை விட்டு அந்நியநாடுகளில் தமது வாழ்வை அமைத்துக் கொண்ட தமிழர்கள் மிகப்பெரிய உந்துசக்தியாக விளங்குகிறார்கள் எனபது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

ஆனால் !.

இப்போதைய இந்தச் சந்ததியின் முடிவுக்குப் பின்னால் இதே வேகத்துடன் தமிழை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு சந்ததி உருவாகிக் கொண்டிருக்கிறதா என்பதுவே ஒரு மிகப்பெரிய கேள்வியாக எம் முன்னே விரிகிறது. பல பெற்றோர் தமது குழந்தைகளுக்கு ஆர்வத்துடன் தமிழைப் பயிற்றுவித்து, தமிழ்க்கலைகளைப் பயிற்றுவித்து வருகிறார்கள் என்பது மிகுந்த மகிழ்வைக் கொடுத்தாலும் இது எந்தவகையான தாகத்துடன் வளரும் சமுதாயத்தால் உள்வாங்கப்படுகிறது என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

தமிழைக் கற்பது மிகவும் இலகுவாக்கப்படக் கூடியமுறையில் "உத்தமம்" அமைப்பின் ஆராய்ச்சிகள் அமைவது அவசியம் இது எதிர்காலத்தில் ஒரு வலுவான தமிழ்ச் சந்ததியைக் கட்டிஎழுப்புவதற்கேற்ற ஒரு பாசறையாக அமைவது அவசியம். தற்போதைய இதன் முன்னேடுப்புக்கள் மிகவும் நம்பிக்கையளிப்பனவாக இருக்கின்றன. இதே உத்வேகம் தொடர வேண்டும் தமிழ்க் கல்விக்கான நோக்கம் மேலும் கூர்மைப் படுத்தப்படவேண்டும்.


தமது வாழ்க்கையின் பெரும்பங்கை எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் , தமிழ் வளர்ச்சிக்கெனச் செலவிட்டு வரும் "உத்தமம்" அமைப்பின் அங்கத்தினர்கள் நிச்சயம் உலகத்தமிழர்களின் எதிர்பார்ப்பைக் கணித்து அதற்கான வேலைத்திட்டங்களை வகுத்துக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

இந்த மாநாட்டின் வெற்றிக்கும் , இதன் அமைப்பாளர்களின் வெற்றிக்கும் உலகத்தமிழர்களில் ஒருவனாக எனது நல்வாழ்த்துக்கள்.

" உத்தமம் உன்னதமாக திகழும் "

# கணினி விளிப்புணர்வு ஆண்டு 2005

## "கம்ப்யூட்டர் ருடே" மற்றும் நிலவு.com பிரகடனம்



இந்த ஆண்டு கணினி விளிப்புணர்வு ஆண்டாக **"கம்ப்யூட்டர் ருடே"** மற்றும் **நிலவு**.com ஆகியோரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் மூலமாக தமிழ் மக்களிடையே கணினி தொடர்பான விளிப்புணர்வு ஒன்றினை ஏற்படுத்தி அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவது என்ற நோக்கத்துடன் **கணினி விளிப்புணர்வு ஆண்டு 2005** பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மேலைநாடுகளில் மட்டுமல்லாமல் ஆசிய நாடுகளிலும் கணினிப்பாவனை பரவலாக காணப்படுகிறது. இந்த நிலையில் நாம் இனியும் கணினிபற்றி ஒரு தெளிவான அறிவோ அல்லது அது தொடர்பான விளக்கமோ இல்லாதிருப்பதும் எமது அன்றாட செயற்பாடுகளை கணினிமயமாக்காது இருப்பதும் ஒரு கவலைக்குரிய விடயம் ஆகும். இந்தநிலை தொடருமானால் நாம் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையை அடையவேண்டிவரும். அதுமட்டுமல்லாது எமது மொழி கலாசாரம் ஆகியவையும் வளர்ச்சி காணாமல் போய்விடும். இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து தப்புவதற்கு நாம் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக் மாறவேண்டியது அவசியம்.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டே **கணினி விளிப்புணர்வு ஆண்டு 2005** பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கருத்தரங்குகள், கண்காட்சிகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்தவுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் போட்டிகள், பரீட்சைகள் போன்றவையும் நடைபெறவுள்ளது.

இந்த செயற்திட்டங்களில் ஆர்வமுள்ளவர்கள் (தனிநபர்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், தொண்டு நிறுவனங்கள்) எம்முடன் தொடர்பு கொண்டால் உங்கள் பகுதிகளில் உடனடியாக இந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

தொடர்புகளுக்கு: Computer Today, 4C6 1/1, Fussels Lane, Colombo 06.
Phone : 0 112 362 112
e m@il : com2day@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


7th Tamil Internet Conference
அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

ஒரு சிறப்புப் பார்வை

# தமிழ் இணைய மாநாடுகளும் தமிழனின் எதிர்பார்ப்பும்.

> "கூட்டத்திற் கூடிநின்று கூடிப்பிதற்றிவிட்டு நாட்டத்திற் கொள்ளாரடி கிளியே"
> -- நாகரத்தினம் கிருஷ்ணா --



"கூட்டத்திற் கூடிநின்று கூடிப்பிதற்றிவிட்டு நாட்டத்திற் கொள்ளாரடி கிளியே"ங்கிற கதைதான் நமது தமிழ் இணைய மாநாடுகளின் கதை. கி.பி. 3004லும் இதுபோன்ற மாநாடுகள் நடக்கும், கட்டுரைகள் வாசிக்கப்படும், ஏற்பாட்டிற்கு பொருளுதவி செய்த சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு நன்றி நவிலப்படும். புதியதாக ஒரு குழு அமைக்கப்படும், பிறகு? பிறகென்ன பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவரவர் ஜோலியைப் பார்க்கத் தம்பாட்டுக்குத் திரும்பிவிடுவார்கள். போன மாநாட்டில் வாசித்தவரும், வாசிக்கப்பட்ட கட்டுரைகளும் அதனூடாக முன்வைக்கப்படும் யோசனைகளும் அடுத்த சில தினங்களுக்குள் சுலபமாக மறக்கப்படும். ஆக, இதுவொரு சம்பிரதாய சடங்காக இன்றைக்குப் பரிணாமம் எடுத்திருக்கிறது.

இந்தக்கட்டுரையை நீங்கள் படிக்கிற காலத்தில் தமிழ் இணைய மாநாடு மீண்டும் சிங்கப்பூரில் 7வது முறையாகக் கூட்டப்பட்டு, கலைந்திருக்கும். இதே சிங்கப்பூரிலேயே முதல் மாநாடு 1997ம் கோலாகலமாக கூடியபொழுது, எடுத்துக்கொண்ட சங்கற்பங்களைக் ஞாபகப்படுத்திக்கொள்வோம்.

1. இணைய தளங்களில் தமிழ்த் தகவல் ஆதாரங்களையும் சேவைகளையும் மேம்படுத்துவது.

2. தமிழ் இணையதள உபயோகிப்பாளரிடையேயான கருத்துப் பரிமாற்றங்களின் அடிப்படையில், தமிழ் இணையத்தின் மேம்பாட்டிற்கான கூறுகளை அறிவது.

3. ஏனைய இணைய உலகினைப்போலவே தமிழ் இணைய தளத்திலும் பொதுவான சீர்மைகளை விசைப்பலகை, எழுத்துக்கள், குறியீடுகள், யூனிக்கோடு முதலியவற்றில் கொண்டுவருவது.

4. தமிழ்த் தகவல் துறையில் ஏற்படுகின்ற ஆய்வு முன்னேற்றங்களை உடனுக்குடன் வெளி உலகிற்கு அறிவிப்பது.

5. தமிழ்க் கல்வித்துறை தொடர்பான தகவல்களை இணையம் மூலம் உலகமெங்கும் கொண்டு செல்வது.

இந்த நேரம்வரை ஏழாண்டுகளுக்குப் பிறகும் நாம் எங்கே இருக்கிறோம் என்கின்ற கேள்வி எழுகின்றது.

இரண்டாவது மாநாடு 1999ம் ஆண்டு சென்னையில் கூடியபொழுது, கணினியின் அதிவேக வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கின்றவகையில் தமிழர்களுக்கிடையே, இணையத்தில் தமிழைமட்டுமே பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை மேம்படுத்துவதென்று முழக்கமிட்டது. பிறகு கீறல் விழுந்த ஒலித்தட்டினைப்போல, அடுத்த சிலமாநாடுகளில் இதனையே வேறு வார்த்தைகளிற் கூறி, சம்பந்தப்பட்டவர்களுக்குச் சலித்துப்போய், தமிழ் இணையதளத்திற்கான பங்களிப்பை அவரவர் புரிந்துகொண்டவகையில் செயல்படுத்த நினைப்பதன் அடையாளமே ஏழாவது மாநாட்டிலும் பிரதிபலிக்கிறது.

இரண்டாவது இணைய மாநாட்டில்(1999ம் ஆண்டு), விசைப்பலகை உபயோகத்திற்கென்று புதுவைப் பல்கலைகழகம் தான் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் ஒலிஇயல் விசைப்பலகைக்குள்ள சாதகமான சூழலை தெரிவித்தது. அதனைக் கருத்திற் கொள்ளாமல் அப்போதைய தமிழக அரசு, ஒலிஇயல் விசைப்பலகை தமிழறிந்த பெருமான்களுக்கென்றும், ஆங்கில எழுத்துவரிசைச் சார்ந்த விசைப்பலகை, தமிழ் தெரிந்த கோமான்களுக்கென்றும், தட்டச்சு சார்ந்தவிசைபலகை பூமான்களுக்குமென்று அறிவித்து, உனக்கும் பெப்பே உங்க அப்பனுக்கும் பெப்பே என்றது.

மூன்றாவது மாநாடு இதே சிங்கப்பூரில் கி.பி. 2000த்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாநாட்டில் தமிழ்க் கணினியில் கூட்டுச் சொற்கள் குறித்து ஒருமித்த கருத்தினைப்பெறும் வகையில் ஒரு வலைத்தளத்தை இலங்கை, இந்திய, சிங்கப்பூர் அரசுகளிடம் மாநாடு பரிந்துரைப்பதாக அறிவித்தது. இது தவிர இம்மாநாட்டிலும் மொழி, தொழில்நுட்பம் சார்ந்த சீர்திருத்தம் செய்யவேண்டியவை என வரிசைபடுத்தப்பட்டு எதை எதையோ வாசிக்க, கேட்பதற்கு நன்றாக இருந்தது. இம்மாநாடு தமிழ் இணையதள தேவைகளை மறந்துவிட்டு மின் வணிக மையம், சமூக மையம் என நோக்கங்களைக் பரவலாக்கி, கலைந்துபோனது. மூன்றாவது மாநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7th Tamil Internet Conference
# அனைத்துலக தமிழ் இணைய மாநாடு

TAMIL INTERNET 2004 SINGAPORE

## ஒரு சிறப்புப் பார்வை

நடத்தியதற்கு, எதையாவது அறிவிக்க வேண்டாமா? அறிவித்தார்கள்: பேரு உத்தமம் - ஆமாங்க அப்படித்தான் அறிவிச்சாங்க. உலகத்தகவல் தகவல் தொழில்நுட்ப அரங்கத்தின் அங்கமாக (INFITT) உலகளாவிய தமிழ் நுட்பச் சமூகம்னு இதைச் சொல்றாங்க. இதற்கென்று ஐந்து பணிக்குழுக்கள். சாதனைகள் என்ன? இதற்கு அடுத்த மாநாட்டில் கட்டுரை வாசித்ததைத் தவிர வேறொன்றுமில்லை.

நான்காவது மாநாடு, 2001ம் ஆண்டில் இம்முறை மலேசியாவில் கூட்டப்பட்டது. இம்மாநாட்டினை தமிழ் இணைய மாநாடு என்றழைப்பதற்கில்லை. மலேசிய அரசாங்கத்தின் ஆதரவில் நடபெற்றதால், சம்பந்தபட்ட அரசாங்கத்தினைத் திருப்திசெய்யும் அளவில் தமிழை மறந்துவிட்டு இணைய மாநாடாய் நடந்து முடிந்தது. கட்டுரை வாசிப்புகள் மாத்திரம் தவறாமல் டின்னர் முடிந்த ஓய்வு நேரங்களில் தமிழ் இணையத்தினை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வாசித்துமுடித்தார்கள். இவற்றுள் தமிழ் இணையப் பல்கலைகழகம்- சென்னை, சார்பில் வாசித்த "தமிழ்க் கணினியில் மறைந்துள்ள சில சிக்கல்களும் சவால்களும்", "பெங்களூர் அன்பரசனின் தமிழ் வரிவடிவத்தில் முரண்பாடுகள் ஆகியவைக் குறிப்பிடக்கூடியவை. இது தவிர OCR, GTT சம்பந்தமாக வாசிக்கபட்ட கட்டுரைகளும் முக்கியமானவையே.

ஐந்தாவது இணையமாநாடு 2002ல் அமெரிக்காவில், பாஸ்டர் நகரிலும், ஆறாவது இணையமாநாடு கடந்த ஆண்டு சென்னையிலும் அதன் வழக்கமான இலக்கணங்களோடு நடந்து முடிந்திருக்கின்றது. இதுவரை இம்மாநாடுகளால் இணைய தளங்கள் உபயோகிக்கும் பாமரத் தமிழன் அடைந்திருக்கும் பலன் என்ன. கச்சேரிக்குப் போய் கட்டுரை வாசிப்பதற்குத்தான் இந்தத் திருவிழாவென்றால், அதனை அவரவர் வீட்டிலிருந்து கொண்டே செய்யலாமே? இம்மாடுகளின் எண்ணிக்கைக் கூடியிருக்கிறதேயழிய மாநாட்டினால் "தமிழின் பங்கு" இணைய உபயோகத்திற் கூடியுள்ளதாகச் சொல்வதற்கில்லை.

இதன் பின்னடைவுகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. மாநாட்டில் கலந்துகொள்கின்றவர்கள் தொழில் நுட்பதிறனைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. ஆனால் அவர்களுக்குள் ஒருமித்த முடிவுக்கு எதுவொன்றிற்கும் வருவதற்கான முயற்சிகள் குறைவு. எல்லோரும் மந்திரிகள், அவரவருக்கு அவரவர் யோசனைகள் பெரிது, முடிவெடுக்க ஓர் அரசன் வேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளில் இந்தியாவையும் சேர்த்து, தமிழ்மொழி மீதான அக்கறை அரசியல் சார்ந்ததேயன்றி உணர்வு சார்ந்தது அல்ல. தமிழ் இணையத்தின் முன்னேற்றம், அடிப்படையில் இரண்டு கால்களை நம்பிக்கொண்டிருக்கிறது. ஒன்று மொழி, இரண்டு தொழில்நுட்பம். தமிழ் இணைய மாநாடு இதுவரை மொழியியல் வல்லுனர்களை கருத்தில்கொள்ளாமலேயே அதாவது நேரடி பங்களிப்பு இல்லாமலேயே நடந்து வந்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாகவேண்டும். மொழிவல்லுனர்கள் அனைவருமே பழமைவாதிகள், கோட்டு சூட்டும் போட்டிருப்பவர்களெல்லாம் புதுமைவிரும்பிகள் என்பதான முன்தீர்மானம், இவர்களுக்கு உண்டு. மாநாடுகளில் பங்கேற்பவர்களின் தொழில்நுட்ப அறிவும், தமிழ் ஆர்வமும் இணைய அகரமுதலி, தொலைத்தொடர் கல்விக்குப் போதுமானவை என்று நீங்களும் நானும் நம்பலாம், தமிழ் இணையதளத்தின் எதிர்பார்ப்புக்கு உதவுமா?

இன்றைக்குத் "தமிழ்" மொழியானது இணையதளங்களில் கண்டுள்ள வளர்ச்சி, இணைய மாநாடுகள் மூலமாகப் பெற்ற வளர்ச்சி என்பதைக்காட்டிலும், இந்த விற்பன்னர்களின் தனிமுயற்சியென்றே சொல்லவேண்டும். தமிழ் இணையங்களின் தலைவிதி இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் ஏகோபித்த அக்கறையை பொறுத்ததுமட்டுமல்ல, இணைய மாநாட்டில் எண்ணிக்கைக் கணக்கிற்காகக் கட்டுரைகளை வாசிக்காமல், வாசித்தபின் அதனை செயல்படுத்துவதையும் பொறுத்து இருக்கிறது.

---

## புதிய தொடர் C

அடுத்த இதழில் இருந்து புதிய தொடர் ஊ

உங்களுக்காக..........

தருவது 'சின்ரெக்ஸ் ராம்'

---

## GIT

சில சிறப்புப் பக்கங்கள் காரணமாக இந்த இதழில் **GIT** தொடர் இடம்பெறவில்லை.

தொடரும் இதழ்களில் வரும்

---

**ரிலாக்ஸ் மாஸ்டர்** **வரும் இதழ்களில்..**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Spam தொல்லை ஒழிகிறது

## குறிவைக்கும் குப்பை அஞ்சல்களை திசை திருப்ப...




எல்லோருக்கும் வந்து கொண்டிருப்பது போல் உங்களுக்கும் ஸ்பாம் (Spam) எனப்படும் குப்பை அஞ்சல்களை வண்டிவண்டியாக வந்து கொண்டுதான் இருக்கும். இந்த குப்பை அஞ்சல்களின் அளவு நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது.

அமெரிக்காவில் வாஷிங்டனில், சென்டர் போர் டெமாக்ரஸி அண்ட் டெக்னாலஜி (Centre for Democary and Technology) என்று ஒரு குழு உள்ளது. அவர்கள் பல புதிய மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்குகிறார்கள். அவற்றை பல்வேறு வழிகளில் பயன்படுத்திப் பார்க்கினறனர்.

எந்த முகவரிக்கு மிக அதிகமாக ஸ்பாம் அஞ்சல்கள் வருகின்றன என்று ஆராய்ந்தனர். சில மாதங்களுக்குப் பிறகு வந்த எல்லா மின்னஞ்சல்களையும் அலசிப்பார்த்தனர். எந்த முகவரிகள் வெப் பக்கங்களில் கொடுக்கப்பட்டு இருந்தனவோ, அந்த முகவரிகளுக்குத்தான் 97 வீதம் ஸ்பாம் அஞ்சல்கள் வந்திருந்தன.

சில முகவரிகளை மின்வணிக தளங்களில் பதிவு செய்ய (Register) பயன்படுத்தினர். அந்த முகவரிகளுக்கும் சில ஸ்பாம் அஞ்சல்கள் வந்தன.

தொழில்முறையில் ஸ்பாம் அஞ்சல் அனுப்புவோர் ஹார்வெஸ்டர்ஸ்(harvesters) என அழைக்கப்படும் புரோக்ராம்களைப் பயன்படுத்துவர். இவை வெகு வேகமாக வெப் தளங்களை அலசி எல்லா மின்னஞ்சல் முகவரிகளையும் திரட்டித் தரும்.

நிலைமை இப்படி இருந்தால், நம் மின்னஞ்சல் முகவரிகளை வெப் பக்கங்களில் போடவே முடியாதா? அப்படி இல்லை. சரியான வழிகளைப் பயன்படுத்தினால் மற்றவர்கள் உங்களைத் தொடர்பு கொள்ள முடியும். அதே நேரத்தில் ஸ்பாம் அனுப்புவர்களால் உங்களுக்குத் தொந்தரவு இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம்.

நம் மின்னஞ்சல் முகவரிகளில் @ என்ற குறி உள்ளது அல்லவா? அதை at என்று எழுதிவிட வேண்டும். அதாவது info@nilavu.com என்பதற்கு பதிலாக info at nilavu.com என்று எழுதிவிடலாம். மேற் கூறிய குழு இப்படிச் செய்ததில் ஒரு ஸ்பாம் அஞ்சல் கூட வரவில்லை.

தற்போது ஸ்பாமர்கள் (Spamers) அதாவது குப்பை அஞ்சல் அனுப்புவோர் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மென்பொருள்களுக்கு, இந்த மாதிரி எழுதி உள்ள முகவரிகளை புரிந்து கொள்ளும் திறமை இல்லை.

உங்கள் முகவரி உண்மையாகவே மின்னஞ்சல் அறுவடைக்காரர்களுக்கு தெரியாமல் இருக்க அதை கிராபிக்கலாக மட்டுமே டிஸ்பிளே செய்யவும்.


அதற்கு ஒரு கிராபிக்ஸ் அப்ளிக்கேஷனைப் பயன்படுத்தவும். உங்கள் முகவரியை தட்டச்சு செய்து ஜிப்(Gif) பைலாக சேமிக்கவும். இந்த கிராபிக்சை உங்கள் பக்கத்தில் போட்டு வைக்கவும்.

ஒப்டிக்கல் கரக்டர் ரெக்கனிஷன் (OCR) ப்ரோக்ராம்கள் எழுத்துக்கள் மற்றும் எண்களை இமேஜ் பைல்களிலிருந்து படிக்க முடியும்.

ஆனாலும் ஒரு ஹார்வெஸ்டிங் புரோக்ராம் ஓசிஆர் பயன்படுத்தி முகவரியை சேகரிக்காது என்று கூறலாம். ஏனெனில் இணையதளங்களில் உள்ள ஒவ்வொரு இமேஜையும் ஸ்கேன் செய்யுமாறு அமைத்தால் அது வெகு மெதுவாக இயங்கத் தொடங்கிவிடும். நேரம் வீணாகும்.

உங்கள் தளத்தில் ஒரு இமெயில் லிங்க் இருந்தால் அதற்காக உள்ள HTML Code உங்கள் மின்னஞ்சல் முகவரியை plain text ஆக வைத்திருக்க கூடாது. ஹார்வெஸ்டிங் புரோகிராம்கள் இப்படிப்பட்ட Code களை எளிதில் படித்து விட முடியும்.

http://automaticlabs.com/products/enkoderform தளத்தில் இலவசமாகக் கிடைக்கக் கூடிய என்கோடிங் சர்வீஸ் உள்ளது. இதைப் பயன்படுத்தவும். எந்த முகவரியைப் பாதுகாக்க வேண்டுமோ அதை என்டர் செய்யவும். என்கோடிங் பட்டனை க்ளிக் செய்தவுடன் ஒரு ஜாவா ஸ்கிரிப்ட் கோட் கிடைக்கும். அந்த code யை paste செய்யவும். ஒரு கிளிக் செய்யப்படக் கூடிய லிங்க் உங்கள் பக்கத்தில் தெரியவரும்.



இந்த ஜாவா ஸ்கிரிப்ட் படிக்க முடியாமல் இருக்கிறதே அதுதான் தந்திரம். இதை ஹார்வெஸ்டிங் ப்ரோக்ராம்களும் படிக்க முடியாது. சிலர் தங்கள் Browser இல் java script இயங்காதவாறு அமைத்து இருப்பார்கள். அவர்களால் அந்த linkஐ பார்க்க முடியாது. ஆகவே உங்கள் முகவரியை graphical ஆகவும். கிளிக் செய்யப்படக் கூடிய java Script link ஆகவும் கொடுக்கவும்.

**சிலந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்டம் ஒன்றை உருவாக்கும் முகமாக வாசகர்களது விபரங்களைச் சேகரிக்கத் திட்டமிட்டிருக்கின்றோம். ஒவ்வொரு இதழிலும், வாசகர் வட்ட உறுப்பினர்களது விபரங்களைப் பிரசுரித்து, வாசகர்களுக்கிடையேயான ஆரோக்கியமான நட்பை உருவாக்கி - தகவல் தொழில்நுட்பப் பரிமாற்ற வலை ஒன்றைக் கட்டி எழுப்புவதே இந்த வாசகர் வட்ட உருவாக்கத்தின் நோக்கமாகும்.

வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாவதற்குரிய விண்ணப்பப் படிவம் கீழே பிரசுரமாகியுள்ளது.

அதனைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்து உங்களையும் கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்ட உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்!

## கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்டம்

### உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

வயது :.................. பிறந்த திகதி :.........................

பாடசாலை / தொழில், முகவரி :...............................

தேசிய/தபால்/பாடசாலை அடையாளஅட்டை இல :
..........................................

தொலைபேசி இல :..........................................................

மின்னஞ்சல் :..........................................................

இணைய முகவரி :..........................................................

தகவல் தொழில்நுட்பத்துறை (IT) யில் ஆர்வமுள்ள வகுதிகள் :..........................................................

வேறு துறையில் ஆர்வங்கள் :..........................................

பொழுது போக்கு :..........................................................

குறிப்பு :

மேலுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றையும் புகைப்படம் இணைக்கப்பட்டிருப்பின் அதனையும் **கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... ..........................................
திகதி. விண்ணப்பதாரியின் ஒப்பம்.

**உறுதிப்படுத்தல்**

மேலுள்ள விபரங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மை எனவும், விண்ணப்பதாரியை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... ..........................................
பதவி முத்திரை உறுதிப்படுத்துபவர் ஒப்பம்.

.................
திகதி

கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கியில் உங்கள் தனிப்பட்ட, நிறுவன விபரங்களைப் பிரசுரிப்பதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் கீழே பிரசுரமாகியுள்ளன. அவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்து உங்கள் விபரங்களையும் பதிவுசெய்து பயன்பெறுங்கள்.

## கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கி

### தொழில் வாய்ப்புத் தேடுவோருக்கு

முழுப் பெயர் :..........................................................

வயது :..........................................................

பிறந்த திகதி :..........................................
தேசிய அடையாள அட்டை இல :...............................

கல்வி கற்ற பாடசாலை :...............................
கல்வித் தகுதி :..........................................
தொழில் அனுபவம் :..........................................
எதிர்பார்க்கும் தொழில்/ பதவி :...............................

தொலைபேசி இல :..........................................
மின்னஞ்சல் :..........................................
இணைய முகவரி :..........................................
ஆர்வம் :..........................................

மேலுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றைக் **கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... ..........................................
திகதி. விண்ணப்பதாரியின் ஒப்பம்.

## கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கி

### வெற்றிடம் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு

நிறுவனம் :..........................................................

முகவரி :..........................................................

பதவி/தொழில் வெற்றிடம் :..........................................

வயது எல்லை :..........................................
எதிர்பார்க்கும் தொழில் அனுபவம் :...............................

**உறுதிப்படுத்தல்**

எமது நிறவனம் சார்பாக நாம் மேலே கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றை பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... ..........................................
பதவி முத்திரை அதிகாரியின் ஒப்பம்.

.................
திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'CD அதிர்ஷ்டம்'

## 'கம்ப்யூட்டர் ருடே' வாசகர்களுக்கு மட்டும் - CD இலவசம்

ஏப்ரல்2004 இதழில் வெளியான பரிசுக் கூப்பனை பூர்த்திசெய்து அனுப்பிவைத்த ஆயிரக்கணக்கான வாசகர்களிலிருந்து பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களது பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவர்களுக்குரிய CDக்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| ந.நேசரூபன், வத்தளை. | ஆ.சங்கீதா, ஹோமாகம. |
| வி.குமரேசன், முள்ளிப்பொத்தானை.. | எம்.தேவகுமார், கொட்டஹேன. |
| ம.விஜயலக்ஷ்மி, கொடிகாமம். | ம.தாரணி, தெஹிவளை. |
| திருமதி.மல்லிகா, உரும்பிராய். | தி.விஜிதரன், பண்டாரவளை. |
| ஏ.வசீனா, பாணந்துறை. | சி.ஜெயகுமார், நுவர. |
| கே.அஸ்ரப், கட்டார். | து.தினேஸ், பொரளை. |
| எம்.ஸ்டாலின், மோதறை. | வ.ராஜ்குமார், கம்பளை. |
| சி.ஜனார்த்தனன், கண்டி. | ந.லிங்கேஸ்வரன், கிளிநொச்சி. |
| த.தினேஷா, பம்பலப்பிட்டி. | சி.குமுதினி, ஹட்டன். |
| திரு.ஆப்தீன், சம்மாந்துறை. | ஸி.அஸ்கர், சவூதி. |

# 'CD அதிர்ஷ்டம்' - 5

* நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

கீழுள்ள கூப்பனை தெளிவாக பூர்த்தி செய்து எமது முகவரிக்கு அனுப்பவும்.

* போட்டோப் பிரதி போன்ற நகல் கூப்பன்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
* அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு இலவசமாக மென்பொருள் CDகிடைக்கும்.
* சந்தாதாரர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்பு இருமடங்கு. (எனவே சந்தா எண்ணையும் குறிப்பிட்டு அனுப்பவும்.)

முகவரி : ***Computer Today, 4c6 1/1 Fussels Lane, Colombo-06.***

இங்கே கத்தரிக்க

கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே

**CD அதிர்ஷ்டம் ! 5**

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................


..................................................

**Tel** :..................................................

**E.mail**: ..................................................


சந்தா எண்(இருப்பின்) : ..................................................

*'CD அதிர்ஷ்டம் 2004 - 05' என்று குறிப்பிட மறவாதீர்கள்.



.......................... ..........................

*திகதி* *கையொப்பம்*



**உடனே இணையுங்கள்**

உங்கள் வீட்டு / அலுவலக வாசலிலேயே **'கம்ப்யூட்டர் ருடே'** ஐ பெற்றுக் கொள்ள இன்றே சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள்.

மாதிரிப்படிவம்

**'கம்ப்யூட்டர் ருடே'**

சஞ்சிகையை நான் மாதாமாதம் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | - ரு 360 | ☐ |
| இரண்டு வருடம் | - ரு 720 | ☐ |
| மூன்று வருடம் | - ரு 1080 | ☐ |

ரூபாவை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

பெயர் : ..........................

..........................

முகவரி : ..........................

..........................

..........................

☎ இல : ..........................

மின்னஞ்சல் : ..........................

நான் இத்துடன் ..........................

.................... இலக்க காசோலையை / காசுக்கட்டளையை 'Computer Today' என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

..........................

கையொப்பம்


பணத்தைக் காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ 'Computer Today' என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

காசுக் கட்டளைகளை கொழும்பு தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**வெளிநாட்டு வாசகர்களுக்கான சந்தாப்படிவம் மறுபக்கத்தில்**

**MAIL COUPON TO:**
***'Computer Today'***
***4c6 1/1 Fussels Lane***
***Colombo-06, Sri Lanka.***
***e-mail:***
com2day@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உடனே இணையுங்கள்**

உங்கள் வீட்டு / அலுவலக வாசலிலேயே 'கம்ப்யூட்டர் ருடே' யைப் பெற்றுக்கொள்ள இன்றே சந்தாதாரராக இணைந்துகொள்ளுங்கள்.

மாதிரிப்படிவம்

**'கம்ப்யூட்டர் ருடே'**

சஞ்சிகையை நான் மாதாமாதம் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | - $ 3 | ☐ |
| ஆறு மாதம் | - $ 6 | ☐ |
| ஒரு வருடம் | - $ 12 | ☐ |
| இரண்டு வருடம் | - $ 24 | ☐ |
| மூன்று வருடம் | - $ 36 | ☐ |

அமெரிக்க டொலரை அல்லது அதற்குச்சமமான பணத்தினை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

Name : ................................
...................................

Address : ................................
...................................

City : ................................

Country : ................................

☎ No : ................................

E-mail : ................................

☐ I enclose Cheque

No :

Drawn on :

For :

I agree to the terms and conditions.

...................................

Signature and Date

காசோலையை 'Dream Solutions (Pvt) Ltd.' என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.


உள்நாட்டு வாசகர்களுக்கான சந்தாப்படிவம் முன்பக்கத்தில்

**MAIL COUPON TO:**

*'Computer Today'*
*4C6 1/1 Fussels Lane,*
*Colombo-06, Sri Lanka.*
*e-mail:*
com2day@gmail.com



# இன் - பொக்ஸ்



## உங்கள் மடல்கள்




"கம்ப்யூட்டர் ருடே"மீண்டும் வெளிவர ஆரம்பித்திருப்பது மிகவும் மகிழ்ச்சி. இனிவரும் காலங்களில் எந்தவித காலதாமதமும் இல்லாமல் வெளியிடுவீர்கள் என நம்புகிறேன்.

த. சுகந்தினி
மட்டக்குளி

---

இணையத்தில் இறக்கியவை பகுதி மூலம் "கம்ப்யூட்டர் ருடே" மேலும் பெறுமதி வாய்ந்ததாக மாறியிருக்கிறது. அந்தப் பகுதியை முழு வர்ணத்தில் போட்டீர்களானால் இன்னமும் நன்றாக இருக்கும்.

ப. லவகுசன்
கிளிநொச்சி

யோசனை நன்றாகத்தான் இருக்கிறது லவகுசன். ஆனால் நாட்டில் ஏறிப்போயிருக்கும் விலைவாசி அதற்கு இடம் தருவதாயில்லை. நாம் என்ன செய்ய?

ஆசிரியர்

---

எமது கணினிக்கண்களை திறக்க நீ ஒருவன்தான் எமக்கு துணை. "கம்ப்யூட்டர் ருடே" இல்லாவிட்டால் எமது கணினி உலகே இருண்டு விடும். இனிவரும் காலங்களில் நீ எமது கரங்களில் கிடைக்கத் தவறிவிடாதே.

ஏ. எம். எம். அஸ்ரவ்
புத்தளம்

எமது அபிமான கணினிச் சஞ்சிகையான "கம்ப்யூட்டர் ருடே" எமது பகுதிக்கு ஒழுங்காக கிடைப்பதில்லை. அதுமட்டுமல்லாமல் கடைகளில் உடனடியாக முடிந்தும் விடுகிறது. இதற்கு ஏதாவது செய்ய முடியுமா?

மு. கனகவேல்
நுவரெலியா

இதற்கு இலகுவான தீர்வு நீங்கள் சந்தாதாரர் ஆகிவிடுவதுதான்.

---

தயவுசெய்து இனிமேலும்"கம்ப்யூட்டர் ருடே" இதழை நிறுத்தி விடாமல் தொடர்ச்சியாக வெளியிடுங்கள். நிறைய பல விடயங்கள் தன்னகத்தே கொண்டுள்ள "கம்ப்யூட்டர் ருடே" பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் பயன்தரக்கூடிய ஒரு இதழ். நான் ஒரு ஆசிரியர் என்றவகையில்தான் இதனைக்கூறுகிறேன்.

ப. குமரேந்திரதாஸ்
யாழ்ப்பாணம்

---

மிகவும் சிறப்பானமுறையில் வடிவமைக்கப்பட்டு வரும் "கம்ப்யூட்டர் ருடே" உண்மையில் மிகமிகப் பயனுள்ள கணினிச் சஞ்சிகை. முழுப்பக்கங்களுமே மிகவும் பிரயோசன முறையில் இறுக்கமாகவும் நேர்த்தியாகவும் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் அடுக்கப்பட்டுள்ள விதம் - மிக அளவான மற்றும் அழகான எழுத்துரு என்பவை வரவேற்கப்படக்கூடிய விடயங்கள்.

ஆர். விமல்ராஜ்
மருதானை

---

இனி எப்பொழுது அடுத்த புத்தகம் வெளிவிடுவதாக எண்ணம்? நீங்கள் நினைத்தபோது எழுதுவதும் விடுவதும் என்று இருந்தால் நாம் என்னசெய்வது? தயவுசெய்து "கம்ப்யூட்டர் ருடே"இனை ஒரு மாதாந்த சஞ்சிகையாக வெளியிடுங்களேன்.

ப. ஜே. அனோஜன்
கொழும்பு

இதோ அடுத்த இதழ். இனிவரும் இதழ்களும் ஒழுங்காக காலக்கிரமத்தில் உங்கள் கைகளில் தவழும் என்பது உறுதி.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்டர் மெமறி பதில்கள்

ம. சுதர்ஸதாசன்
மாத்தளை


கே: வின்டோஸ் ஆரம்பித்து **desktop** வந்தவுடன் என்னுடைய **mouse** அல்லது **keyboard** ஆனது நிறைய நேரங்களுக்கு பிறகுதான் **Active** ஆகிறது. இந்த நோரத்தை எவ்வாறு குறைப்பது.?

உங்களுடைய கணினியில் Start Button --> Programs --> Startup என்ற பகுதியில் பார்த்தீர்களானால் அங்கே நிறைய Icon கள் இருக்கும் இவை உங்களுடைய வின்டோஸ் Load ஆகும் போது ஆரம்பிக்க வேண்டிய புரேக்கிராம்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும். இவை இருப்பதால் தான் அந்த நேரம் எடுக்கிறது. இவற்றை right click செய்து delete செய்து விடுங்கள். அல்லது உங்களுடைய dektop இல் நிறைய Shortcut இருந்தாலும் இவ்வாறு தான் நேரமாகும். இதனால் அதிகபடியான Shortcut மற்றும் படங்களை desktop இல் வைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் உங்களுடைய நேரத்தை சேமிக்கலாம்.

— — — — — — — — — —

த. உஸ்னா
பண்டாரவளை

கே: **Ms-Office** இல் ஒரு சில பயன்களை **Open** செய்யும் போது இது போன்ற ஒரு வின்டோ வந்து தடுத்து விடுகிறது. அவற்றை நான் எவ்வாறு பயன்படுத்துவது?




Office package நிறுவும் போது Select All என்ற option கொடுக்கப்படாவிட்டால் இவ்வாறு அநேகமான பயன்படுத்த முடியாது. எனவே Office Package நிறுவும் போது கவனித்து Custom Installation என்று கொடுத்து Select All என்ற Option யை தெரிவு செய்து நிறுவப் பழகிக் கொள்ளுங்கள். இனி, எப்போது இவ்வாறு ஒரு விண்டோ வருகிறதோ அந்த நேரத்தில் நீங்கள் உங்கள் கணினியில் நிறுவப்பட்ட Office தொகுப்பு உள்ள குறுவட்டை உங்களைடைய அதற்கான Drive இல் போட்டு முமு என்பதை கிளக் செய்தால் போதும். அந்த பயன்கள் நிறுவப்பட்டுவிடும். இப்போது நீங்கள் அவற்றைப் பயன்படுத்தலாம்.

— — — — — — — — — —

க. முகுந்தன்
சுதுமலை

கே: என்னுடைய கணினியில் சில இணையப் பக்கங்களை பார்க்கும் போது எனக்கு அதில் உள்ள தலைப்பு படங்கள் போன்றவை தெரிவதில்லை. அவற்றை நான் பார்க்க என்ன செய்ய வேண்டும்?

அன்பார்ந்த வாசகரே! பெரும்பாலான இணையதளங்கள் தங்களுடைய தலைப்பு படங்கள் மற்றும் விளம்பர பகுதிகளை ஒரு Flash Animation ஆக காட்டியிருப்பார்கள். உங்களுடைய கணினியில் Flash Animation இயங்குவதற்கு தேவையான மென்பொருள் இல்லையென்றால் அதாவது நீங்கள் Flash Player யை இதுவரை நிறுவாமல் இருந்தல் இந்த பகுதிகளை நீங்கள் பார்க்க முடியாது. ஆகவே முதலில் உங்களுடைய கணினியில் Flash Player யை நிறுவுங்கள். அதற்கான இணைப்பானது இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

http://www.macromedia.com/shockwave/download/download.cgi?P1_Prod_Version= ShockwaveFlash

— — — — — — — — — —

மௌ. மயூரன்
வவுனியா

கே: ~ என்ற **Symbol** உடன் கூடிய பைல்கள் அடிக்கடி தோன்றுகின்றன. இவற்றிற்கு எந்த **Extenstions** உம் இருப்பதில்லை இவையெல்லாம் என்ன? இவற்றை அழித்து விடலாமா?

hello~1.doc என்பது போன்று ஒரு பைல் பெயரானது tilde symbol மற்றும் முற்றுப்புள்ளிக்கு முன்னால் எதாவது ஒரு எண்ணுடன் இருந்தால் நீண்ட வின்டோஸ் பைல் பெயரானது வெட்டப்பட்டு Dos க்கு ஏற்ற வகையில் சிறிய பெயர் மட்டுமே உள்ளது என்று பொருளாகும். இதைத் தவிர ஒரு பைலின் பெயரில் வேறு எங்கு tilde symbol வந்தாலும் அது Backup பைல் ஆகும்.

ஒரு பைலின் பெயரில் tilde symbol மட்டுமே இருந்தால் அது Outlook-Express address book இன் backup பைலாக இருக்கலாம். நீங்கள் அண்மையில் செய்த மாற்றங்களுக்கு முந்தைய அட்ரஸ்புக்கின் Copy இதில் இருக்கும்.

இந்த பைல்களை அழித்தால் addressbook backup களும் அழிக்கப்பட்டுவிடும். ஆனால் சீரான கால இடைவெளியில் Backup எடுத்து வைப்பவர்களுக்கு இது சிக்கல் ஏற்படுத்தாது.

உங்கள் கேள்விகளுக்கான முகவரி:
மிஸ்டர் மெமறி பதில்கள்
**கம்ப்யூட்டர் ருடே**
**4C6 1/1, Fussels Lane,**
**Colombo 06, Sri Lanka.**
(குறிப்பு: தொலைபேசியில் மிஸ்டர் மெமறி பதில் கூறமாட்டார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது தமிழ் கணினிச் சஞ்சிகை

**தகவல் தொழில்நுட்பத்தின் சகல பரிமாணங்களையும் வாசர்களின் பார்வைக்குக் கொண்டுவரும் சஞ்சிகை**

இலங்கை முழுவதும், உலகில் தமிழ் பேசுவோர் வாழும் இடமெங்கும் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் கணினிச் சஞ்சிகை


முழுக்குடும்பமுமே வாசித்துப் பயனடையக்கூடிய சஞ்சிகை

**இப்படியொரு கணினிச் சஞ்சிகையில்தானே உங்கள் விளம்பரமும் இடம்பெறவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?**

அழையுங்கள் :

**0112 362 112**

**உங்கள் இதழில்...**







**ஜூனியர்**

**கம்ப்யூட்டர் ருடே**

சின்னஞ்சிறிய கணினி வல்லுநர்களுக்காக...

**உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**




## லினக்ஸ் (18ஆம் பக்க தொடர்ச்சி)

கமாண்ட்களை வைத்துக்கொண்டு அவர்கள் மண்டையைப் பியத்துக்கொள்ளத் தேவை இல்லை. லினக்ஸைப் பற்றிய அடிப்படை அறிவே அவர்களுக்குப் போதும். இது ரொம்ப நாளுக்கு உதவும்.

**தெரிந்ததை கற்றுக் கொடுங்கள்!**

லினக்ஸை வெற்றிகரமாக இன்ஸ்டால் செய்து ஆபீஸ் வேலைகளை செய்வ திலும் இன்டர்நெட்டைப் பயன்படுத்துவதிலும் ராஜா ஆகிவிட்டீர்கள் என்று வைத் துக்கொள்வோம். ஆனால் நீங்கள் லினக்ஸ் குரு இல்லை. கமாண்ட்களை அடி ப்பதில் நீங்கள் ஸ்லோ. ஒரு ஈ-மெயிலைப் படிக்க சில நொடிகளில் பத்து வரி code அடிக்கும் லினக்ஸ் புலிகளைப் பார்த்தால் உங்களுக்குப் பொறாமையாக இருக்கிறது. அந்த வேலையை நீங்கள் பட்டனை க்ளிக் செய்து முடிக்கிறீர்கள் (ஒரு நொடியில் 10ல் ஒரு பங்கு நேரத்தில்). லினக்ஸைக் கரைத்துக் குடித்தவர் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நீங்கள் "அற்பப் பதர்" மாதிரி பீல் பண்ணு கிறீர்கள். நியாயம்தான்.

ஆனால் ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தீர்களா? லினக்ஸை பயனாளர்களின் ஆபரேட்டிங் சிஸ்டமாக அறிந்த உங்களைப் போன்றவர்தான் புதிதாக லினக்ஸைப் பயன்படுத்துபவர்களுக்கு அந்த குருக்களை விட உபயோக மான வேலை செய்ய முடியும். நீங்கள் சாதாரண பயனாளர்தான் என்றாலும் அவர்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்க முடியும்.

இதை தொழில்நுட்பம் அல்லாத உதவி என்றுதான் சொல்லவேண்டும். ஏனென் றால் பெரும்பாலான புதிய லினக்ஸ் பயனாளர்களுக்கு எளிமையான வேலைகளை சுலபமாக எப்படி செய்வது என்பதற்கான எளிமையான உதவிக் குறிப்புகள் கிடைப்பதில்லை. ஆகவே, லினக்ஸ் ஓரளவு மட்டுமே தெரிந்தவர்கள் புதிய பயனாளர்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்கும் வேலையை ஒட்டுமொத்தமாக லினக்ஸ் புலிகளிடம் விட்டுவிடக்கூடாது.


லினக்ஸின் மிகச் சிறந்த அம்சங்களில் ஒன்று, வளைந்து கொடுக்கும் தன்மை. இந்த அம்சத்தை லினக்ஸைக் கற்றுக்கொள்வதிலும் கொண்டு வரவேண்டிய நேரம் இது. லினக்ஸ் கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்தவர்களுக்கு மட்டுமில்லை, லினக்ஸை முதன்முதலாகப் பயன்படுத்தத் தயாராக இருக்கும் எதிர்வீட்டுக்காரரு க்கும் பக்கத்து வீட்டுக்காரருக்கும்தான். இவர்கள் ஒரு வெப்சைட்டைப் பார்ப்ப தற்காக கட்டுக்கட்டாய் லினக்ஸ் பாடபுத்தகங்களைப் படிக்கத் தயாராக இல்லை.

லினக்ஸுக்கான இந்தப் புதிய அணுகுமுறைதான் அதை நடைமுறைக்கு ஒத்துவருகிற டெஸ்க்டாப் ஆபரேட்டிங் சிஸ்டமாக மாற்றும்.

---

வரும் இதழ்களில் தொடர்ச்சியாக லினக்ஸ் பாவனை பற்றிய கட்டுரைகள் வெளிவரஇருக்கின்றன. நீங்கள் ஒரு லினக்ஸ் பாவனையாளராக இருந்தால் எழுதி அனுப்பலாம். -ஆசிரியர்

உங்கள் கேள்விகளுக்கு -



# மெமறியிடம் கேளுங்கள்!

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார் **மிஸ்டர் மெமறி !**

*உங்கள் கேள்விக்கணைகள் வந்துசேர வேண்டிய முகவரி : 'மெமறியிடம் கேளுங்கள்', **கம்ப்யூட்டர் ருடே**, 4C6 பசல்ஸ் லேன், வெள்ளவத்தை, கொழும்பு - 06.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லூடக குறுவட்டுக்கள்

நிலவு.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com .
A Member of Dream Solutions (Pvt) Ltd.

வெளியீடுகள்

கம்ப்யூட்டர் info
கணினி - இணையம் - நுட்பம்

இப்பொழுது விற்பனையில்

4C6 1/1, Fussels Lane,
Colombo - 06,
Sri Lanka.
T.P : 0112 362 112

275, யாழ் வீதி,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே : 0777 740413

email : sales@nilavu.com

**தமிழ் மொழி மூல கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள் நாடெங்கும் விற்பனையில் உள்ளன.**

**நேரடியாக அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு - 0112 362 112**




நாடு முழுவதும் விற்பனையாளர்களும் விநியோகஸ்தர்களும் தேவை

**இலங்கையில் பல்லூடக குறுவட்டுக்களின் முன்னோடிகள்**

**-- The King of Multimedia --**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org